PATHUKAVALAN

பாதுகாவலன்
அ. பெ. இல. 2,
யாழ்ப்பாணம்
தனிப்பிரதி ரூபா 1-50
தபால் மூலம் தனிப்பிரதி
ஆண்டு சந்தா
ரூபா 100/-
வெளிநாட்டு சந்தா 15£ (30U. S $). தொகையாகப் பத்திரிகை பெறுபவர்கள் ஆண்டு சந்தா முற்பணமாக செலுத்துவதாயின் பிரதிக்குரூபா 60/-மட்டுமே.

மலர்: 115 இதழ்: 5 3-2-1989 (ஜனவரி-3பெப்ரவரி 10) பிரதி ரூபா 1-50 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

ஐரோப்பிய கலாசாரத்தை அறிய சோவியத் சஞ்சிகையில் புதிய ஏற்பாடு தொடர்ச்சியாக வெளியீடு:

# சோவியத்தில் 723 கிறிஸ்தவ ஆலயங்களும் குருமடங்களும் திறக்கப்பட்டுள்ளன

**சென்ற ஆண்டு சோவியத்தில் புதிய ஆலயங்களும், பல காலமாக மூடப்பட்டிருந்த ஆலயங்களுமாக மொத்தம் 723 கிறிஸ்தவ வழிபாட்டு ஸ்தலங்கள் திறக்கப்பட்டுள்ளதாக வத்திக்கான்வானொலி அறிவித்தது. இறையியல் கற்பிக்கும் நான்கு குருத்துவக் கல்லூரிகளை நிறுவுவதற்கும் அனுமதிவழங்கப்பட்டுள்ளது. மாத சஞ்சிகையில் நற்செய்தி பகுதி பகுதியாக வெளிவருகிறது.**

1988ஆம் ஆண்டு சோவியத் யூனியனில் 723 கோவில்கள் திறக்கப்பட்டதாக வத்திக்கான் வானொலி அறிவித்தது. மிகப் பழமை வாய்ந்த பல கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. ஒரு சில மட்டும் உல்லாசப் பயணிகளின் காட்சிப் பொருட்களாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டன. பாதுகாக்கப்பட்டிருந்த கோவில்கள் உட்படப் புதிதாக மொத்தம் 723 கோவில்கள் சென்ற ஆண்டு வழிபாட்டுக்குத் திறந்துவிடப்பட்டன.

குருத்துவ மாணவர்களை பயிற்றுவிற்பதற்கென நான்கு இறையியல் குருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது

சோவியத்தில் வெளிவரும் மாதச் சஞ்சிகை ஒன்று மத்தேயு நற்செய்தியின் முதல் எட்டு அதிகாரங்களையும் ஒரு இதழில் வெளியிட்டுள்ளது. தொடர்ந்து மாதா மாதம் பகுதி பகுதியாக நற்செய்தி முழுவதையும் வெளியிடவுள்ளது. சோவியத்திலுள்ள தொல்பொருள்களைப் பார்ப்பவர்கள் அவற்றை விளங்கிக் கொள்ள ஐரோப்பிய கலாசாரத்தை அறிந்திருக்க வேண்டும் என்பதாலேயே புதிய ஏற்பாடு பிரசுரிக்கப்படுகிறது என இதழ் ஆசிரியர் குறிப்பு கூறுகிறது.

## இறை இயல் கோலங்கள்

சிறிதுகால இடைவெளியின் பின் மீண்டும் புத்துயிர் பெற்று மூன்று இதழ்களை முகை அவிழ்த்து, வெளிவந்துள்ள 'இறைஇயல்கோலங்கள்' சஞ்சிகையின் எழுத்தாளர்கள், விமர்சனங்கள், இறையியல் சிந்தனையாளர்கள் யாவரும் தைத்திங்கள் 28-ம் நாள் புனித சவேரியார் குருமடத்தில் ஒன்று கூடினார்கள்.

மங்கள தீபமேற்றி கருத்தரங்கு காலை 9 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது. இன்றைய மறைச் சமுதாயத்தில்

என்றும் தலைப்பில் அடிகளார் கரவையூர்ச் செல்வம் தமக்கே உரித்தான பாணியில் நடைமுறைக் கருத்துக்களை ஒளிவு மறைவு இன்றி எடுத்து விளக்கினார். "வழிபாடு மீட்பின் செயல் எல்லோருக்கும், உரியது. ஆனால் இது சிலரைத் தண்டிக்கவும், சிலரை தீமைகள் புரியவும் துணைபோகின்றது. இறைமக்கள் பயணிகள் மந்தைகள் அல்ல. அவர்கள் புத்தி, சிந்தனை உள்ளவர்கள், அவர்களுடன் சேர்ந்து பயணம் செய்யவேண்டும்" என்று அவர்

அடையாளங்களும் என்னும் தலைப்பில் அருள்திரு. ஜே. நீக்கிலஸ் அடிகளார் பேசினார். "திருச்சபை அனைவருக்கும், மீட்பளிக்கும் அடையாளம். ஒவ்வொரு கிறிஸ்தவனும், மீட்பைக் கொடுக்கும், பொறுப்புள்ளவன், ஏனெனில் திருமுழுக்கினூடாக அவன் மீட்பை அபரிதமாகப் பெற்றுள்ளான்" என்று அவர் குறிபபிட்டார்.

இதன் பின்பு கருத்தரங்கில் இருந்தவர்கள் குழுக்களாகப் பிரித்து 4 தலைப்புகளில் குழு ஆய்வு" செய்தார்கள். ஈற்றில் மதிய போசனத்துடன் பிற்பகல் 1.30 மணியளவில் கருத்தரங்கு முடிவுற்றது.

## "கிறிஸ்துவின் கடைசி சோதனை" தடைசெய்யப்பட்டது

"கிறிஸ்துவின் கடைசிச் சோதனை" என்னும் திரைப் படம் இந்தியாவில் திரையிடப் படமாட்டாது என பிரதமர் ராஜிவ் காந்தி உறுதியளித்துள்ளார் சில கிறிஸ்தவர்கள் ஒக்டோபர் 15ல் அனுப்பிய ஒரு விண்ணப்பத்தின் பேரிலேயே இம் முடிவு எடுக்கப்பட்டது.

அண்மைக்காலத்தில் சமய அடிப்படையில் இந்தியாவில் தடை செய்யப்பட்டவற்றுள் இது மூன்ருவதாகும்.

சென்ற ஆவணி மாதம் கேரள மாநிலத்தில் ஒரு மலையாள நாடகம் நீதிமன்றத்

எதிர்ப்பின் பேரில் ஒரு நாவல் அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்டது.

"கிறிஸ்துவின் கடைசிச் சோதனைக்கு" எதிராக ஆட்சேபனை எழுப்பியவர்கள் புரொட்டஸ்தாந்து நடுநிலையத்தார். பல கிறிஸ்தவ சபைகள் அதை எதிர்த்து ஊர்வலமும் நடத்தின. கத்தோலிக்க திருச்சபை அவை இரண்டிலும் கலந்து கொள்ளவில்லை.

சல்மான் ருஷ்டி எழுதிய நாவல் தடைசெய்யப்பட்டமை சில எதிர்ப்புகளுக்கும்

ரங்கு காலை 9 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது. இன்றைய மறைச் சமுதாயத்தில் மிகவும் வேண்டப்படும் கருத்தான "வாழ்வும் வழிபாடும்"

சிந்தனை உள்ளவர்கள், அவர்களுடன் சேர்ந்து பயணம் செய்யவேண்டும்" என்று அவர் தமது உரையில் கூறினர்.

அடுத்து திருவழிபாடும்,

ஆய்வு" செய்தார்கள். ஈற்றில் மதிய போசனத்துடன் பிற்பகல் 1. 30 மணியளவில் கருத்தரங்கு முடிவுற்றது.

மக்டலீன் சின்னப்பு.

சென்ற ஆவணி மாதம் கேரள மாநிலத்தில் ஒரு மலையாள நாடகம் நீதிமன்றத் தீர்ப்பினுல் தடைசெய்யப்பட்டது.

அடுத்து இஸ்லாமியருடைய

சல்மான் ருஷ்டி எழுதிய நாவல் தடைசெய்யப்பட்டமை சில எதிர்ப்புகளுக்கும் ஆளாகியுள்ளது. அரசாங்கம் தனிநபர் சுதந்திரத்தில் தலையிடுவதற்காக ஒரு பத்திரிகை குற்றஞ்சாட்டியுள்ளது.

# றொறண்டோ வாழ் ஈழத்தமிழ் கத். மக்கள் கொண்டாடிய நத்தார் திருப்பலி

றொறன்ரோ வாழ் ஈழத் தமிழ் கத்தோலிக்க மக்கள் அனைவரும் கூடி திருப்பலியில் கலந்து கொள்வதற்காக யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர்கள் இப்பலியினை ஏற்பாடு செய்தனர். மேலும் இப்பலி நிகழவிருப்பதை வாரம் தோறும் ஞாயிறு தமிழ் சேவையை நடாத்தும் உலகத்தமிழர் இயக்கம் வானெலி அமைப்பும் தமது ஒலிபரப்பில் முக்கியத்துவம் கொடுத்து ஒலிபரப்பியது.

மார்கழி 30-ம் நாள் பிற்பகல் 5-30 மணி றொறன்ரோவின் பிரபல்யமான ஆலயமான அர்ச். தோமஸ் மூர் தேவாலயத்தில் தமிழ்மக்கள் கடும் குளிரையும் பொருட்படுத்தாது ஒன்றுகூடினர்கள். ஒளிவிழாத்திருப்பலி நிறைவேற்ற அடிகளார் ஆலயப்பின் புறத்தில் தயாராகினர். இத் திருப்பலியை ஒழுங்குசெய்த சம்பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர்களுக்கு யாழ். திருக்குடும்ப கன்னியர் மட பழைய மாணவியரும் தம் தம் முழு பங்களிப்பையும் நல்கினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழர் பண்பாட்டுக் கமைய ஆராத்தி எடுக்க, இரு கல்லூரிகளின் மாணவர்களின் குழந்தைகள் பாடசாலை சீருடையில் பாடசாலை கொடிகளுடன் குருவை பீடத்துக்கு அழைத்து வந்தனர்.

நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து எமக்கு திருப்பலியாற்ற வருகை தந்திருந்த தமது குருத்துவத்தின் வெள்ளி விழாவை நிறைவுசெய்த எம் விழா நாயகரான அருட்திரு றெட்ணபாலா அடிகளாரை மகிழ்ச்சிப் பூரிப்புடன் வரவேற்றோம்.

திருப்பலி முடிவில் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

# ஆர்மேனியாவில் அன்னை திரேசா

பூமி நடுக்கத்தால் பாதிப்புற்ற ஆர்மேனிய மக்களுக்கு உதவிபுரிவதற்காகச் சென்றுள்ள அன்னைதிரேசா டிசம்பர் 16ஆம் திகதி மாஸ்கோவை அடைந்தார். ரோமாபுரியிலிருந்து ஐந்து உதவியாளருடன் அவர் சென்றுள்ளார்.

ஆர்மேனியாவில் நிவாரண வேலைக்காக இவர்கள் ஒரு குழுவை அமைத்துள்ளனர். பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் அவர் ஒரு சேவை நிலையத்தை அமைப்பாரா என வினவப்பட்டபோது, அது பாதிக்கப்பட்டோரின் தேவைகளைப் பொறுத்தது என அவர் விடையளித்தார். அத்துடன் உலகெங்கணுமுள்ள மக்களை ஆர்மேனியாவுக்குத் துணைக் கரம் நீட்டும்படி கேட்டுக் கொண்டார்.

சோவியத் நாட்டைச் சேர்ந்த திருமதி. ஸ்வெற்லானு ரக்ஷா, பாகிஸ்தானிலுள்ள ஆப்கான் முகாம்களில் வைக்கப்பட்டிருக்கும் சோவியத் யுத்தக் கைதிகளுக்கு துணைபுரியுமாறு அன்னை திரேசாவை உருக்கமாக வேண்டிக்கொண்டார். தம்மாலானதைச் செய்வதாக அன்னை திரேசா வாக்களித்தார்.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

# எம் கருத்து

## வித்தியாசமானவர் 'வித்தி'

பல்கலைக்கழக உபவேந்தர்—

கல்விப் பரம்பரையில் தோன்றியவர்—

தன்னைத்தொடர ஒரு கல்விப் பாரம்பரியத்தையே உருவாக்கிய பெருந்தகை—

கருணை நெஞ்சினர்—

பெரும் பதவி வகித்தவராக விருந்தும் சாமானியனாகவே எல்லோருக்கும் விளங்கியவர்.

தன் மாணவர்களின் தேவையை நிறைவு செய்ய தன் தகுதி நோக்காது அவர்கள் தம் வீடுகளைத் தேடிச் சென்ற பண்பாளன்.

இவை மட்டுமல்ல—இன்னும் எத்தனையோ—புகழ்மாலைகள் அமரராகிவிட்ட பெருந்தகை பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களைப் பற்றி தினம் தினம் பத்திரிகைகளில் வந்துகொண்டே இருக்கின்றன. அவ் வாழ்த்துக்களுக்கெல்லாம் அவர் தகுதியானவர் என்பதில் ஐயம் சிறிதுமில்லை.

இவற்றோடு கத்தோலிக்கர் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய இன்னுமொன்றுமுண்டு. கத்தோலிக்க குரவராகவும், பெருங் கல்விமானாகவும் விளங்கிய தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் பெரும் நண்பன். 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டினை, தான் அரச நிர்வாக ஆணைக்குக் கட்டுப்பட வேண்டிய முக்கிய பதவியில் இருந்த போதும் கூட தமிழ் மீது கொண்ட தணியாத பக்தியால் அரச எதிர்ப்புக்கும் அஞ்சாமல் தனிநாயகம் அடிகளாரோடு தோளோடு தோள் சேர்ந்து நின்று மாநாட்டின் வெற்றிக்காக உழைத்த பெருமகனுமாவார்.

இக்காரணத்தையும்விட இன்னுமொரு முக்கிய காரணத்துக்காக தமிழ்க்கத்தோலிக்க உலகம் பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளது.

விவிலியமோ - ஏனைய மறைக்கல்வி நூல்களோ ஓலைச்சுவடி வடிவத்தில் தானும் எல்லோர் கைகளுக்கும் கிடைக்காத - போதிய குருக்கள் முதலாக இல்லாத 16ஆம் நூற்றாண்டு காலத்தில் எம்மக்களுக்கு மறைக் கருத்துக்களை நிதானமாகக் காட்டிக் கற்பித்தவை எமது கத்தோலிக்க நாட்டுக் கூத்துகளே. இவை கத்தோலிக்க புலவர்களால் பாடப்பட்டவையே. இந்த அற்புதக் கலைச்செல்வங்கள் ஓலைச் சுவடிகளாகவும் நாளடைவில் கையெழுத்துப் பிரதிகளாகவும் குறிப்பிட்ட ஒரு சிலரால் காப்பாற்றப்பட்டு வந்தவைகள். இவற்றையெல்லாம் சமயம் சார்ந்த நூல்கள்

திருத்தந்தையின் உலக சமாதான தினச் செய்தி:

## துன்புறும் சிறுபான்மைக் குழுக்களைச் சேர்ந்தவர்களோடு நான் ஆன்மீக முறையில் நெருங்கியுள்ளேன்

மெய்யாகவே ஒருவிதத்தில் சிறுபான்மையினருக்கு மதிப்புக்கொடுப்பது சமூக ஒற்றுமைக்கு ஒரு உரைகல்லாகவும், ஒரு நாடும் அதன் நிறுவனங்களும் அடைந்துள்ள குடியியல் முதிர்ச்சிக்கு அறிகுறியாகவும் கருதப்படும். உண்மையான ஒரு சனநாயக சமுதாயத்தில், அரசியல் வாழ்வில் சிறுபான்மையினருக்கு நிலையான பங்களிக்கப்படுவது மிகுந்த அபிவிருத்தியடைந்த நாகரிகத்துக்கு அடையாளமாகும். உண்மையான சுதந்திரமான ஒருசூழ்நிலையில், சகல குடி மக்களுக்கும் தேசிய வாழ்வில் நிலையான பங்களிக்கப்படும் நாடுகளுக்கு இதனால் பெருமதிப்புக் கிடைக்கின்றது.

13. இறுதியாக, கிறிஸ்துவில் என் சகோதர சகோதரிகளுக்கு ஒரு விசேட வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். எமது தோற்றுவாய் எதுவாயினும், நாம் எங்கு வாழ்ந்தாலும், நாம் "கடவுளுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்" ஆகிவிட்டதால், கிறிஸ்துவில் ஒரே தேவ ஆவியில் தந்தையை அணுகும் பேறுபெற்றோம்" (எபே. 2:18-19) என்பதை விசுவாசத்தின்மூலம் அறிவோம். இறைவனின் ஒரே குடும்பத்தின் அங்கத்தவராகிய நாம் எம் மத்தியில் பிளவையோ பாரபட்சத்தையோ அனுமதிக்கமுடியாது. தந்தை தமது மகனை உலகிற்கு அனுப்பிய போது அனைத்துலகையும் மீட்கும் பணியை அவரிடம் ஒப்படைத்தார். அனைவரும் "உயிர் பெறும்படியும், அதை மிகுதியாகப் பெறும்படியுமே" யேசு வந்தார். (அரு. 10:10) இப்போது எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஒருமைப்படுத்தும் இந்த அன்புப்பணியிலிருந்து எந்த நபரோ, குழுவோ ஒதுக்கப்படுவதில்லை. யேசுநாதர் தமது மரணத்துக்குமுன் "தந்தாய், நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல் அவர்களும் நம்முள் ஒன்றாய் இருக்கும்படி மன்றாடுகிறேன்." (அரு. 17:21) என்ற எளிமையான உன்னதமான வார்த்தைகளில் செபித்தது போல் நாமும் செபித்தல் வேண்டும்.

இந்தச் செபம் எமது வாழ்க்கைப் பணியும் சாட்சியுமாக இருக்கவேண்டும். ஏனெனில் கிறிஸ்தவர்கள் என்றமட்டில் நாம் மனிதருக்கிடையே வேற்றுமை பாராட்டாதவரும், "அகதியை நேசித்து அவனுக்கு உணவும் உடையும் தந்தருளுபவருமான" ஒரு பொதுத் தந்தை எமக்கிருக்கிறார் என ஏற்றுக்கொள்ளுகிறோம்.

14. பொதுவில் பாரபட்சம் காட்டுவது பற்றியோ, இச்செய்தியில் உள்ளதுபோல் சிறுபான்மைக் குழுக்களைப் பாதிக்கும் ஒரு குறிப்பிட்ட பாரபட்சத்தைப் பற்றியோ திருச்சபை பேசும்போது, முதல் முதலில் தனது சொந்த அங்கத்தவர்களுக்கே—அவர்கள் அந்நிலை, சமுதாயத்தில் வகிக்கும் பொறுப்பு எதுவாயினும்—அழைத்துக் கூறுகின்றது. திருச்சபையினுள்ளே பாரபட்சத்துக்கு இடமில்லாததுபோல், மனிதர்களையோ குழுக்களையோ அநீதியாகப் பிளவுபடுத்தும் கொள்கைகளையோ அமைப்புகளையோ ஒரு கிறிஸ்தவன் அறிந்துகொண்டு ஆதரிக்கமுடியாது. வன்முறைகளைக் கையாளுவோருக்கும் அதை ஆதரிப்போருக்கும் இதே போதனை பொருந்தும்.

15. இச்செய்தியை முடிக்கும் இவ்வேளையில், துன்புறும் சிறுபான்மைக் குழுக்களைச் சேர்ந்தவர்களோடு நான் ஆன்மீக முறையில் நெருங்கியுள்ளமையை எடுத்துக்கூற விரும்புகிறேன். அவர்களது துன்ப வேளைகளையும், நியாயப்படி அவர்கள் பெருமைகொள்ள வேண்டிய காரணங்களையும் நான் அறிவேன். அவர்களது துன்பங்கள் விலகிப்போக, அனைவரும் தமது உரிமைகளைப் பெற்று பாதுகாப்போடு வாழ வேண்டுமென்பதே எனது பிரார்த்தனை. நாம் தேடும் சமாதானம், கிறிஸ்து என்னும் மூலைக்கல்லின் மேல் கட்டப்பட்ட உண்மையான சமாதானமாக இருக்கவேண்டுமென்று செபிக்குமபடி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமது அன்பு, சமாதானம் என்னும் கொடையினால் இறைவன் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

வத்திக்கான், 8 டிசம்பர் 1988
2ஆம் அருள் சின்னப்பர்

# சினிமா

## சினிமா பற்றிய ஒரு கருத்து

இன்றைய கலைவடிவங்களில் அதிக அளவில் மக்களால் சுவைக்கப்படுவது சினிமா ஒன்றுதான். ஏனைய கலை இலக்

எனவே சமூகப் பிரக்ஞை அற்ற தயாரிப்பாளர்கள் தமது முதலீட்டை லாபத்துடன் மீட்டெடுக்கும் வெறும் வியாபாரிகளாகவே இருக்கின்றார்கள்.

கவின் பாடல்கள் பல நகைப்பிற்குரியனவாகவே இருக்கின்றன. திடீர் திடீரென நாயக, நாயகிகள் பாடுகின்றார்கள் ஆடுகின்றார்கள். ஒரு படத்தில் இத்தனை காதற்பாடல்கள், இத்தனை சோகப்பாடல்கள் என தீர்மானிக்கப்பட்டவை போல் திரைக்கதையுடன் ஒட்டாமல் சம்பந்தமற்றுக் காணப்படுகின்றன. திரைப்படத்தில் பாடல்கள் இடம் பெறக்கூடாதென்பதல்ல. கதைக்கு ஏற்ப பாத்திரங்களின் மனநிலைகளை விளக்க பாடல்களை அமைப்பது வலிமையுடைய

பிட்ட ஒரு சிலரால காப்பறறப்பட்டு வந்தவை கள். இவறறையெலலாம் சமயம் சார்ந்த நூல்கள் என்ற நோக்கில கொளளாது தமிழக் கலைச்செல்வங் கள் என்ற பெருமனதோடு பேணி அவற்றை அறுபது களில் அச்சுப் பிரதிகளாககிக காப்பாற்றி எம கத்தோ லிக்க உலகுக்குத் தநத பெருமை பேராசிரியர் அவர் களையே சார்நதது.

வித்தியானந்தன் அவர்களின் வசனங்களில் சொல்வதானால் "ஒரு நாடகததை ஏட்டில் எழுதச் செலவு ரூபா பத்து அல்லது இருபது மரககால் நெல். இநதக் காசையோ, நெல்லையோ கொடுக்க இயலாமற பல நாடகங்கள் சரவைப் பிரதிகளாகவே ஆண்டுக் கணக்காக இருந்தன" (ஆதாரம; எனறிக்கு எம்பர தோர் நாடகம' தோற்றுவாய்)

இந்த நிலையில் புறக்கணிக்கப்பட்டிருந்த கத்தோ லிக்க நாடக ஏட்டுப் பிரதிகளாம் "என்றிக் எம்பர தோர் நாடகம்" "மூவிராசாக்கள் நாடகம்" "ஞான சவுந்தரி நாடகம்" ஆகியவற்றை அச்சு நூலாக்கிய துடன் இவற்றின் அண்ணாவிமார்களையும் கௌரவித்த பெருமை பேராசிரியர் அவர்களையே சாரும்.

பிறப்பால் இந்துவாய் இருந்தும் இக்கத்தோ லிக்க கலைச் செல்வங்களைப் பேணிக்காத்துத் தந்த வித் தியாசமானவர் வித்தியானந்தன் அவர்கள். அவரை நாம் நன்றியோடு நினைவு கூருவோம். அவரது ஆன்ம சாந்திக்காக மன்றாடுவோம்-அவரது இழப்பால் கலங்கி நிற்கும் அனைவருக்கும், எமது அனுதாபங்களைத் தெரிவிப்போம்.

இன்றைய கலைவடிவங்களில் அதிக அளவில் மக்களால் சுவைக்கப்படுவது சினிமா ஒன்றுதான். ஏனைய கலை இலக் கியவடிவங்கள் இந்த அளவிற்கு மக்களைச் சென்றடைவதும் இல்லை. மக்கள் மனதில் கூடிய கருத்துச்செறிவை, தாக்கத் தினை ஏற்படுத்தும் ஒரு கலைச் சாதனமும் இதுவே. எனவே மக்களைபபற்றிச் சிந்திப்பவர் கள் ச்சாதனத்தைப்பற்றிச் சிந்திப்பதும் தவிர்க்கவியலா ததே,

பொதுவாக இன்றைய சினி மாவை கலைப்படங்கள், கலைத் தரமற்ற வர்த்தகத்திரைப் படங்கள் என இருபிரிவாக வகைப்படுத்தலாம். இது எல்லா நாட்டு மொழிப்படங் களுக்குமுரிய பொதுவான விதி யாகும். ஆயினும் இங்கு எனது கருத்துக்கள் இந்திய மொழிப்படங்கள் பற்றியதும் குறிப்பாக தமிழ் மொழிதிரைப் படங்கள் பற்றியதுமாகும்.

இன்று திரைப்படத்துறையே கலைத்துறையில் அதிக முதலீட் டையும, அதிக இலாபத்தை யும், அதிக நட்டத்தினையும் கொண்ட தொழிலாகும். எனவே சமூகப் பிரக்ஞை அற்ற தயாரிப்பாளர்கள் தமது முத லீட்டை லாபத்துடன் மீட்டெ டுக்கும் வெறும் வியாபாரிக ளாகவே இருக்கின்றார்கள். அதற்காக கலையை அவர்கள் எவ்வளவு தூரம் சீரழிக்க முடி யுமோ அவ்வளவு தூரம் செல் லக் கூடியவர்களாக இருக்கின் றார்கள். ஒரு திரைப்படத்திற்கு அடிப்படைத் தேவைகளான திரைக்கதை, இசை, ஒளிப் பதிவு, கமெரா கோணம், படத்தொகுப்பு, நெறியாள்கை என்பவைகளைப்பற்றி அறவே மறந்தவர் களாகக் காணப்படு கிறார்கள்.

திரைக்கதையைப் பொறுத் தவரை நம திரைப்படங்கள் காட்டும் வாழ்க்கையைப் பெரும்பாலும் நிஜ வாழ்வில் நாம் எங்கும் காணமுடியாது. திரைக்கதை ஒரு கலை வடிவம் என்ற வகையில அது யதார்த்த வாழ்வின் சாரங்களை உள்வாங் கிய ஒரு படைப்பாளியின் வெளிப்பாட்டு நிலையினை அவை காட்டுவதாக இல்லை. பொய் யான வாழ்வையும், போலி யான உறவுகளையும், தரங் கெட்ட நடைமுறைகளையுமே அவை நமக்கு அளிக்கின்றன. இப்பகைத் திரைப்படங் படுகின்றன. திரைப்படத்தில பாடல்கள் இடம் பெறக் கூடாததென்பதலல. கதைககு ஏற்பபாத்திரங்களின் மனோ நிலைகளை விளக்க பாடல்கள அமைப்பது வலிமையுடைய தாகவே இருக்கும்.

தமிழ்த் திரைப்படங்களில் உரையாடல்கள் தேவைக்கு அதிகமாக, ஏன், மிதமிஞ்சியே காணப்படுகின்றன. பார்வை யாலேயே புரிநது கொள்ளக் கூடிய விடயங்களுக்கெல்லாம் விளக்கப சொல்லும் போக் கினை நாம் காணலாம். இசை யைபபற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. பெரும்பா லும் தமிழ் திரைபபடங்கள் இசையினாலலல சத்தங்களினா லேயே நிறைந்திருக்கும். மௌ னக் காட்சிகள் சில வேளைகளில் ஆழ்ந்த அர்த்தங்களை உடை யன என்பதை இவர்கள் மறந்து போய்விடுகிறார்கள் பழையகால மௌனத் திரைப் படங்கள் ஏற்படுத்திய உன்னத பாதிப்புக்களை இவர்கள நினைவு கொள்ள வேண்டும். சேர்ஜி ஐஸன்ஸ்ரைனின் "பற்றல்சிப் பொட்டம்கின்" சார்லி சப்ளி னின் "சேககஸ்". ஆகிய வற்றை இதற்கு குறிப்பிடலாம்.

(தொடரும்)

**வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்**

# கிறிஸ்தவ ஒன்றுகூடல்

கடந்த தைத்திங்கள் 25 ஆம் திகதி யாழ் தொடர்பகத்தில் கிறிஸ்தவ ஒன்றுகூடல் இடம் பெற்றது இதற்கு பல கிறிஸ் தவ சபைகளின் பிரதிநிதிகள் சமூகமளித்து தமது சிந்தனை களைப் பரிமாறினர்கள் இச்சிந் தனைப் பரிமாற்றத்தின்போது கலாநிதி எஸ். ஜே. இம்மானு வேல் அடிகளார் பின்வரும் சிந்தனைகளை முன்வைத்தார்.

★ கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமைவளரவேண்டுமென்று ஆசிக்கின்றோம் ஆனல் இப்படி யான சிந்தனைகளையும், ஒன்று பட்ட செயற்பாடுகளையும் வளர்ப்பதன்மூலம் நாங்கள் ஒரே வழிபாட்டிற் பங்குபற்றி, ஒரே பாடல்களைப் பாடி ஒரே திருச்சபையாக ஒன்று சேரு வோம் என்று கனவு காணக் கூடாது. மாறாக பிரிவினைகளின் மத்தியிலும் நாங்கள் எங்கள் எங்கள் மாபு முறைகளைப்புதுப் பித்து அதை ஒருவரோடொரு வர் பகிர்ந்து வாழ்வதன் மூலம் ஒன்றுபட்டு வாழமுயல வேண்டும்.

★ இறையியல் வல்லுனர் கள் திருச்சபைகளின் மேல்மட் டத்தில் இருப்போர் சபைக ளின் ஒற்றுமை பற்றி பல மாநாடுகள், பேரவைகளை நடாத்தி வருகின்றனர். அது மிகவும் வரவேற்கத் தக்கது. ஆனல் அவையெல்லாம் சாதா ரண மக்களிடையே ஒற்று மையை. ஒன்றிப்பை வளர்க் கத் துணைசெய்யவேண்டும்.

★ நாங்கள் ஒவ்வொரு சபையினரும் மற்றவர்கள் மட் டுமல்ல மாறுக, எம்மட்டிலே கோபப்படக் காரணங்கள் உண்டு எனென்றால் இறை யியலாளர்கள் திருச்சபையின் மேலிடத்திலுள்ளவர்கள் தங் களுக்குள்ளே ஒன்றுபட்டு உரை யாடல்களை, ஒன்றிப்பு வழிகளை முன்வைத்துள்ளனர். ஆனல்நடு மட்டத்தில் உள்ளவர்கள், குருக் கள் பங்கின் நடைமுறை மேய்ப்புப்பணிக்காரணங்களைக் காட்டி ஒன்றிப்பை வளர்க்க முயற்சி எடுக்காதவர்க ளாக. செயற்திறன் அற் றவர்களாக இருக்கின்றோம். "நாங்கள் முயற்சி எடுத்தோம். எங்களை ஆயர் அல்லது குரு முதல்வர் தடுத்தனர்" என்று இங்கு யாராவது சொல்ல முடியுமா? நாங்கள் இப்படி யான ஒன்றிப்பு வேலைகளிலிரு ந்து தப்புவதற்கு இலகுவாக எமது அதிகாரிகள் மேல் பழி யைப்போட்டு விடுகின்றோம். இப்படியான போக்கு எம்மிலே இருக்கிறதென்று எண்ணி நாங் கள் எங்களையே கோபித்துக் கொள்ளவேண்டும்.

★ மேய்ப்புப்பணி ஒன் றிப்பு அல்ல, நாம்வேண்டுவது. மாறுக தீர்க்கதரிசன ஒன் றிப்பே எமக்குத் தேவை. போத கர்களாக, குருக்களாக, தலைவர் களாக இருக்கும் நாம் இறைவ னுக்கும் மனிதருக்குமிடையே மத்தியஸ்தபணி (Mediating role) புரிபவர்களாக இருக்கின் றோம். இறைவன் எமது தலை மைப்பீடத்தில் உள்ளவர் கள் மூலமும், இறையிய லாளர்கள் மூலமும் எமக் கருளியுள்ள ஒன்றிப்பு ஆவியை (Eccmenical Spirit) மக்களுக்கும் அருள எமக்குக் கடமையுண்டு. ஆனல் நாம் இந்தக் கடமையிலிருந்து பல தடவைகள் தவறியுள்ளோம். பல சபையினரும் ஒன்றுபட்டு வாழ பல சந்தர்ப்பங்களை இறைவன் கடந்த காலத்தில் தந்திருந்தார். மக்கள் எல்லோ ரும் ஒன்ருக வாழவேண்டும் என்ற ஆசையுடன் ஒன்றுகூடி ஒருவர் ஒருவருடைய இன்ப துன்பங்களிற் பங்குகொண்டுள் ளார்கள் பங்குபெற ஆசிக்கின் றார்கள். ஆனல் நாங்கள்தான் அவர்கள் ஒன்ருவதைத் தடுக் கும் முட்டுக்கட்டைகளை பல சட்டங்கள் மூலம், பழமை பேணுவதன் மூலம் போட்டு வருகின்றோம்.

அரசாங்கம் எந்தவித பெய ருமில்லாமல் நிவாரணப் பணியை வங்கி மூலம் வழங்கி வருகின்றது ஆனல் நாங்கள் அவர்களைப்போல வெளிநாடு களிலிருந்து பணத்தைப் பெறு கின்றோம். ஆனல் பணித்தளத் தில் எமது சபைகளின் பெய ரையே மையமாக வைத்து பணிகளை ஆற்றுகின்றோம். நிவாரணம் கொடுக்கின்றோம். இது மிகவும் வெட்கப்பட வேண்டிய ஒற்றுமைக்குத் தடையான வழிமுறை.

★ ஒற்றுமையை வளர்க்க நாம் என்ன செய்ய முடியும்?

* எமது திருச்சபைகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப்பற் றிய தகவல்களை ஒருவரோ டொருவர் பகிர்ந்து, வரவேற்று புரிந்துணர்வை வளர்க்கலாம்.

* முக்கிய திருவிழாக்க ளான—கிறிஸ்துவின் பிறப்பு, உயிர்ப்பு, பரிசுத்த ஆவியின் தினம் போன்றவற்றிற்கு சபை கள் ஒன்றுகூடி பொது வழி பாடு பொது இடங்களில் நடத் தலாம்.

* கத்தோலிக்க பாடசாலை களுக்கும், புரட்டஸ்தாந்து பாடசாலைகளுக்குமிடையே உறவுகளை வளர்க்கலாம்.

* போதகர், குருக்கள் ஒன் றிணைந்து குழுவை உருவாக்கி ஒருவரொருவருடைய பிணக்கு களை சகோதரத்துவ முறையில் தீர்த்துவைக்கலாம். செபவழி பாடுகளை ஆயத்தப்படுத்தி கருத்துக்களையும் செபங்களை யும் பரிமாறலாம்.

அனைவரின் கருத்துக்களையும் வரவேற்ற செல்வரட்ணம் அடி கள் நாங்கள் வழிபாடுகளுடன் நின்றுவிடாமல் வாழ்க்கையில் ஒன்றுபட்டு வாழ்ந்த நிறை வைக்கொண்டு வழிபாடுகளை நடாத்தமுடியுமானல் அதுவே எமது ஒன்றிப்பிற்கு சிறந்த சாட்சியமாகும். இதற்காக ஒவ்வொருவரும் உழைப்போம் என்றுகூறி செபத்துடன் ஒன்று கூடலை நிறைவுசெய்தார்.

தகவல்: எஸ். யூஜின் பிரான்சிஸ்

# வாழ்வோதயம்

மன்னர் மாவட்டத்தில் வாழும் மக்கள் நன்றியுணர்வு டன் நினைவுகூரும் சமூக சீர மைப்பு அமைப்புக்களுள் 'வாழ் வோதய'மும் ஒன்ருகும். சிறப் பாக அண்மைக்காலத்தில் இடம்பெற்ற அனர்த்தங்களி ணல் குறிப்பாக தொடர்ந்தும் நம்மக்களுக்கு இழைக்கப்படு கின்ற அராஜகச் செயல்களி ணல் உயிர் இழந்தோர் குடி பெயர்ந்தோர் ஊனமுற்றோர், தொழில் வருவாயிழந்தோர், அகதிகளாக்கப்பட்டோர், நாடு திரும்புவோர் என்ற பலவேறு பிரிவினர்க்கு நேசக்கரம் நீட்டி அவர்கள் தம் வாழ்வைப்புனர மைக்க பொருளுதவி, நிதியுதவி மூலமும் ஆளுமைபற்றிய கருத் தரங்குகள் உருவாக்கம்பற்றிய ஆய்வரங்குகள் என்பவற்றினூ டாகவும் பணிபுரிந்து வருகின் றது. மடிந்துவிட்ட மனித வாழ்வை மலரவைக்க உதிர்ந்து விட்ட மானிடப்பூக்களை மீண் டும் உயிர்ப்பிக்க தூரவுணர்வு டன் செயல்படுகிறதென்ருலும் வியப்பில்லை.

மதம், குலம் இனம் மொழி என்ற வரையறைகளுக்கு அப் பாற்பட்டமுறையில் யாவரை யும் சமநோக்குடனும் மாண் புடனும் மதித்து பெரும்பணி புரிவது வாழ்வோதயத்தின் தனிச்சிறப்பாகும். மன்/மறை வட்டத்தின் நிர்வாகத்தின்கீழ் இயங்கிவரும் இவ்வமைப்பு தனது திட்டங்களை செயற் பாடுகளை பங்குத் தளங்களில் பணிபுரியும் குருக்கள் ஊடா கவே நடைமுறைப்படுத்துகின றது. குருக்கள் தமது தளங்கள் அமைந்துள்ள இடங்களில் வாழும் பாதிப்புக்குள்ளாகிய எல்லாப் பிரிவினரையும் உள் ளடக்கி, உதவிகளைப் பகிர்ந் தளித்து தேவைக்கேற்ப முக் கியத்துவம் கொடுத்து செயற் படுவதைக்காணக்கூடியதாக வுள்ளது

மிகவும் அண்மைக்காலங் களில் பல்வேறு திட்டங்களை மிகத்துரிதமாக அமுல் படுத் தியுள்ளமை மக்களின் கவ னத்தை மிகவும் ஈர்த்துள்ளது. சிறப்பாக இறந்தோருக்கான நிவாரணம், குடிபெயர்ந்தோ ருக்கான வீடமைப்புத் திட்டங் களை தொழில் மூலவளங்களை இழந்தோருக்கு சுயவருவாய் வேலைத்திட்டம் அனாதைப்பிள் ளைகளுக்கு கல்விபெறும் வாய்ப் புகள், சுகாதார சேவைகள், இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்பு என்று இன்றும்பல வற்றை கட்டத்தட்ட எல்லாப் பங்குத் தளங்களிலும் அமுல் படுத்தியுள்ளது. மக்கள் இன் றும இவைகளை நன்றியுணர்வு டன் நினைவுகூருகின்ருர்கள். அத்துடன் கணக்கெடுப்பு, மீளாய்வுசெய்தல் என்பனவும் உன்னிப்பாகக் கவனிக்கப்படு கின்றன.

நெருக்கடிகள் மத்தியில், நம்மக்கள் வாழ்க்கையின் விளிம் பில் ஊசலாடிக்கொண்டிருக் கும் வேளையில், அவர்களது மாண்பைக் காப்பாற்ற அவர் களுக்கு நம்பிக்கையை ஊட்ட, உறுதிபடைத்த நெஞ்சினராய் அவர்களை உருவாக்க பல வகை யான, சவால்களுடன் அரும் பணியாற்றும் 'வாழ்வோத யமே' நீ, வாழ்க' வளர்க உன் சேவை நம்மக்களுக்கு வைகறை யின் பூபாளங்களாக வாழ்வின் உதயமாக மலரட்டும்.

ம. போல் நட்சத்திரம் ம. ம. தி. நானாட்டான்

# பொதுநிலையினர் கழகம்-புதுக்குடியிருப்பு

புதுக்குடியிருப்பு பங்கின் பொதுநிலையினர் கழகம் பங் குத்தந்தை அருள்திரு J. ஜெப ரட்ணம் அடிகளால் 22.01.89 அன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. பொதுநிலையினர் கழகம் ஸ்தா பிக்கப்படுவதன் நோக்கம், அதன் கட்டமைப்பு, செயற் பாடு என்பன பற்றி பங்குத் தந்தையால் பூரண விளக்கம் தரப்பட்டது. அதனைத் தொடர்ந்து நிர்வாகத்தெரிவு இடம்பெற்றது.

தலைவர்: திரு. தே. தொம்மை யப்பு (முன்னள் அதிபர்) மாத் தளன் புனித அடைக்கலமாதா ஆலயம், உபதலைவர்: திரு. பி. செலஸ்ரின், இரணைப்பாலை புனித பத்திமாமாதா ஆலயம், செயலாளர்: திரு. ம. சூசை முத்து. புதுக்குடியிருப்பு புனித வளன் ஆலயம், உபசெயலா

(தொடர்ச்சி 7 ஆம்பக்கம்)

# புதுக்குடியிருப்பில் மறையாசிரியர் சங்கக் கூட்டம்

புதுக்குடியிருப்பு பங்கு மறை யாசிரியர் சங்கத்தின் இவ் வாண்டின் முதற்கூட்டம் 15-01-1989 ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இவ் வருடத்தின் "அமுலாக்கல் திட்டம்" பற்றி இதில் கலந் தாலோசிக்கப்பட்டது. தீர்மா னங்கள் எடுக்கப்பட்டன. பங்குத் தந்தையின் அறிவுரை களுடனும், ஆசியுரையுடனும், செயலாளர் நன்றியுரையுட னும் கூட்டம் முடிவுற்றது.

கத்தோலிக்க ஆசிரியர் சங்கத் தின் பொதுக்கூட்டம் :

புதுக்குடியிருப்பு கிளை கத் தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 21-01-1989 சனிக்கிழமை புதுக்குடியிருப்பு றோ. க. வித்தி யாலயத்தில் நடைபெற்றது. இதில் புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெற்றதோடு, பங்கு களில் மறைக்கல்வியைப் போதிப்பதில் ஆசிரியர்களுக் குள்ள சிரமங்கள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டன. புதிய நிர்வாகத்தில் தெரிவு செய்யப் பட்டவர்கள் :

தலைவர்: முன்னள் அதிபர் திரு. தே. தொம்மையப்பு.
உபதலைவர்: திருமதி. றீற்று வாஷிங்ரன் ஆசிரியை.
செயலாளர்: முன்னள் அதிபர் திரு க. சி. கந்தையா.
உபசெயலாளர்: திரு. அன்ரன் குலதாஸ் ஆசிரியர்.
பொருளாளர்: அதிபர் திரு. யோ. தாவீது.

நிர்வாக குழு உறுப்பினர்கள்'

1. திருமதி. கிறேஷியன் மரியமலர்—புதுக்குடியிருப்பு.
2. செல்வி. அ, புனிதசீலி. —இரணைப்பாலை.
3. திரு. பி. சே. எட்வெட் ராசா—ஆனந்தபுரம்
4. செல்வன் ரவீந்திரன்— இரணைப்பாலை.
5. செல்வி. அ. றேஸ்மலர் —அலையன்மடம்.
6. திரு. யோ. தவராசா— —இரணைப்பாலை.

செல்வி S. K. ஜீவராணி புனிதா

# நெடுந்தீவுப் பங்கில் ஒற்றுமையின் ஒளிவிழா

மக்களிடையே மதங்களி டையே வேற்றுமைகள் இருந் தாலும், கிறிஸ்துவின் ஒளியில் நாம் அனைவரும் ஒன்றிணைந்த ஒரு குடும்பத்தின் பிள்ளைகளே என்பதை உணர்த்தி நெடுந் தீவில் இயங்கும் ஐக்கிய நாணய சங்கங்கள் ஒன்றிணைந்து நடத் திய மாபெரும் கிறிஸ்மஸ் ஒளி விழா 22.12.88 அன்று நெடுந்தீவுப் பங்கில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

அன்று மாலை 4.00 மணிக்கு நெ/மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள லூர்துமாதா "கெபியில்" திருப்பலியை ஒப் புக்கொடுத்து விழாவை ஆரம் பித்து வைத்தார். எம் பங்குத் தந்தை அருள்திரு. அமிர்த குமார் அவர்கள். திருப்பலியில் அவருடன் அருள்செல்வன் யூஜின் அவர்களும் இணைந்து சிறப்பித்தார். திருப்பலியைத் தொடர்ந்து அருள்சகோதர, சகோதரிகளுடன் சங்கங்களின் தலைவர்களும் விழா மேடைக்கு விழாக் குழுவினரால் வர வேற்று அழைத்து வரப்பட் டார்கள். கிறிஸ்துவின் பிறப்பை மகிமைப்படுத்தும் ஒளி தீபங்கள் இருபத்து நான்கு (24) சங்க அங்கத்தவர்களால் அலங்கரிக்கப்பட்ட மேடை யின் முன்பாக ஏற்றிவைக்கப் பட்டது. அதைத் தொடர்ந்து பங்குத்தந்தை மங்கள விளக் கேற்றி நிகழ்ச்சிகளை ஆரம் பித்து வைத்தார். ஒளி விழா வின் சிறப்பு பேச்சாளர்களாக அழைக்கப்பட்டிருந்த பேச்சா ளர்கள் தங்கள் சிறப்புரைகளை வழங்கி நிகழ்ச்சியை சிறப்பிக்க பங்குத்தந்தை ஆசியுரை வழங் கினர். போட்டி, பொருமை, பூசல்கள் மலிந்த இக்கட்டான இந்த கால நிலையில மதத்தால் வேறுபட்ட உள்ளங்கள் ஒன் றிணைந்து மனுக்குலத்தை மீட்க குழந்தை உருவெடுத்த திவ் விய பாலனுக்கு விழா எடுத் தற்கு நன்றிகூறி பாலனின் அருள் அனைவர் இல்லங்களி லும். அவர் தம் உள்ளங்களி லும் நிறைந்திட வேண்டு மென்று அருள் உரை நவின்ருர்.

இறுதியாக கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அதைத் தொடர்ந்து நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுகண்டது.

நெடுநகர் நேசன்.

# காய்க்கின்ற மரத்துக்கு விழுகின்ற கல்லெறிகள்

## சிறுகதை

அது ஒரு பசுமையான கிராமம்! பல்வேறுபட்ட பதத்தினரும், பரந்து வாழும் அந்தக் கிராமத்துக்கு—ஏன் அயற்கிராமங்களுக்குக்கூட, தன்னலமற்ற தன்னாலான தன்னையே பிய்த்து, "எரி மெழுகாக" தன்னையுருக்கி வாழும் ஒரு தலைமகன்! ஆம் அவர் பெயர் "வெற்றி இராஜன்"

மக்களுக்காக, தன்னுயிரையும் மதியாது போராட்ட காலங்களிலே, பிரச்சினைகள் மத்தியிலே தன் குடும்பம் தன்வீடு, தன்னுறவினர்கள் அனைவரையும் உதறித்தள்ளிவிட்டு, "ஏழைகளின் சிரிப்பினிலே இறைவனைக் காணுகின்றவன் அவன்"

"சுயநலம் இல்லாமல் பொதுநலமில்லை" என்பார்கள். "ஆகாரத்துக்காக அழுக்கைச் சாப்பிட்டு தடாகத்தைச் சுத்தப்படுத்துமாம் மீன்!" இதுவே மீனுக்கு சுயநலம்.! தடாகத்தில் நீராடுகின்றவர்களுக்குப் பொது நலம்! இவையனைத்தையும் பொய்ப்பிப்பதற்கென்றே அவதரித்தவனோ என்னவோ? மனிதர்களிலே இவன் ஒரு "வித்தியாசமானவன்."

"மெய்வருத்தம் பாரார் பசி நோக்கார் கண்துஞ்சார் கருமமே கண்ணாயினர்." என்று கவிஞன் பாடியது இவனைக் குறித்துத் தானோ என்னவோ? அந்த ஊரிலே உயர்ந்து நிற்கும் கோபுரத்தைப் போல' அவனுள்ளத்திலும், உறுதியிலும், இலட்சியத்திலும் உயர்ந்தே நின்றான்.

சிலருக்குப் பெயரும்—அவர் வாழ்வும் பொருத்தமாக அமைந்து விடுகின்றது. "வெற்றி இராஜன்" என்று இவனுக்குப் பெயர் வைத்த பெற்றோர் இவனின் பிற்கால வாழ்க்கையை முன்கூட்டியே அறிந்தார்களோ என்னவோ? "பொருத்தமான" பெயரை இட்டு மகிழ்ந்தனர்.

ஆனாலும் அவனின் பெயர் அந்த ஊரிலே அவ்வளவு பிரபல்யமாக விளங்கவில்லை. பொதுவில் சிறுவர் முதற்கொண்டு பெரியோர் வரை அவனை "அப்பா அப்பா" என்றுதான் அழைத்து மகிழ்வார்கள். காரணம் எல்லோரையும் நேசிக்கும் தந்தை போல அவன் விளங்கியதுதான்!

அப்பா என்றழைக்கும் போது நீங்கள் நினைப்பீர்கள் ஒரு வயதான 'கிழவன்" என்று! அப்படி அவன் ஒரு தலைநரைத்த கிழவனுமல்ல—தடுமாறும் சிறுவனுமல்ல! மக்களோடு அப்படி ஒன்றிப் பழகிவிட்டதால்தான் இப்படி அழைத்தார்கள். குறிப்பாகச் சொல்லப் போனால் சமுதாயத்தால் நசுக்கப்பட்டவர்கள், வளர்ச்சி குன்றியோர், கைவிடப்பட்ட அநாதிகள் அபலைகட்கு மட்டில் அவனுக்கொரு தனி ஆர்வம்.

மனித்தியாலக் கணக்காக தன்னுணவையும் மறந்து தன் குடும்பத்தை சார்ந்தவர்களின் கண்டனையைக்கூடப் பொருட்படுத்தாது அவனை நாடி வந்தவர்களின் மனக் குறைகளை மாற்றுவதிலும், அவர்களை மகிழ்விப்பதிலும் அவனுக்கொரு பரமதிருப்தி. இதனால் அவனை சார்ந்த நண்பர்களின், பெரியவர்களின் 'அன்பான கண்டிப்புக்கும்" அவன் அடிக்கடி ஆளாவதுண்டு.

அவனின் அன்பையும், பரிவையும் மன்னிக்கும் மனப்பான்மையையும் சிலர் தவறாக எடை போட்டு அவனை ஓர் "இழிச்சவாயன்" என்று நினைப்பதுமுண்டு. இதற்கெல்லாம் அவன் ஒருபோதும் வேதனைப் பட்டதில்லை. "போற்றுவார் போற்றினாலும் புழுதிவாரித் தூற்றுவார் தூற்றினாலும் நம்கடன் பணிசெய்து கிடப்பதே!" என்ற முன்னோரின் அறிவுரைப்படி, வாழ்வதிலே அவனுக்கு நிகர் அவனே.

ஆனால் அன்று காலை நடந்த சம்பவம் அவனையும் அவனின் நண்பர்களையும் ஒரு உலுப்பு உலுப்பிவிட்டது. காரணம்: எந்த இளைஞனை அவன் அன்பு செய்தானோ? அவன் ஊனமுற்றவனாக குடும்பத்தாலும், தன் சொந்த சகோதரர்களினாலும், கைவிடப்பட்ட நிலையில் "வெற்றி இராஜனிடம் அபயம் தேடி ஆலோசனைக்கும், ஆறுதலுக்கும் அடிக்கடி வந்து செல்வானோ அவனே ஒரு நாள் கூரிய கத்தியுடன் அவர் முன் தோன்றி உன்னைக் கொலை செய்வேன்! உன்னை சந்தியில் வைத்து அவமானப்படுத்துவேன்!! என்று வீராப்புப் பேசியது தான்

"கண்ணாடி விரியன்" போல அவன் சீறிச் சினந்து அவர் முன் நின்ற போது அவனைத் தடுப்பதற்குக் கூட அங்கு நின்றவர்களுக்கு மனது வரவில்லை.

இவ்வளவுக்கும் அவன் கோபம் கொண்டதன் காரணம்? "அவர் பொதுச்சேவையில் ஈடுபடலாகாது! மற்றவர்களை மதிக்கவோ அன்பு செய்யவோ கூடாது" "தனக்கு மட்டுமே" அவர் "அப்பாவாக" இருக்க வேண்டுமென்ற நப்பாசை! இப்படிப்பட்டவர்களை ஒருவித "பைத்தியம் பிடித்தவர்கள்" என்றுதான் சொல்லவேண்டும்.

இப்படிப்பட்ட ஒரு சில "பைத்தியங்களுக்காக" அவன் மனமுடையவோ—அன்றி அவ்வூர் மக்களை வெறுக்கவோ மனதிலே 'சலிப்படையவோ' இல்லை; தொடர்ந்தும் தன் பணியை செய்துகொண்டே இருக்கின்றான்.

"வெற்றி இராஜ"னுக்கும் ஒருவித பைத்தியம் தான்! ஆம், 'அன்புப் பைத்தியம்"! அவனின் நண்பர்கள் ஆறுதல் கூறிச் சென்றபோது அவன் சொன்ன வார்த்தை 'காய்க்கிற மரத்துக்குத்தான் கல்லெறி விழுமென்பார்கள்'. இப்படி அடக்கமாகப் புன்சிரிப்புடன் கூறிவிட்டு போர்வையைத் தூக்கி தோளிற் போட்டுக் கொண்டு தொடர்கிறான் ஒரு அகதிவீடடிற்கு! அங்கு நின்றவர்கள்... முணுமுணுக்கிறார்கள். "இவர் மனிதர்களிலே ஒரு வித்தியாசமானவர்" என்று.

(யாவும் கற்பனையல்ல)

யோகா, செட்டிகுளம்

# எமது இனத்தின் போராட்ட வரலாற்றைப் பின்னணியாகக் கொண்ட நூல்

எமது மக்களுக்கு என்னென்ன தேவைகள் அவசியமாகவுள்ளனவோ அவற்றை கத்தோலிக்க திருச்சபையானது சமயம் கடந்த நிலையிலே மக்களுக்கு பணியாகச் செய்து வருகின்றது அப்படியொரு பணியாகத்தான் அனைத்துமக்களுக்கும் பயன்படக்கூடிய ஒரு மாதவெளியீடாகத் 'தொண்டன்' சஞ்சிகை வெளிவந்து கொண்டிருக்கின்றது. 'பயணம் தொடர்கிறது' நூலாசிரியர் நாவண்ணன் அவர்களை கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக நான் அறிவேன். அவர் சிறந்த எழுத்தாளர், கவிஞர், ஓவியர், அவரது நாவலைத் தொண்டன் வெளியீட்டகம் தமது முதல் வெளியீடாக வெளியிடுவதில் நான் மகிழ்வடைகின்றேன்.

28-12-88 மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் இடம் பெற்ற நவண்ணனின் "பயணம் தொடர்கின்றது" நூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய திருமலை மட்டுநகர் ஆயர் பேரருள்திரு கிங்சிலி சுவாம்பிள்ளை அவர்கள் மேற்கண்டவாறு கூறினார் அவர் மேலும் தனது உரையில் பிரான்சியப் புரட்சியைப் பின்னணியாகக் வைத்து சாள்ஸ் டிக்கன் எழுதிய வரலாற்று நாவலைப் போன்று எமது தமிழ் இனத்தின் ஆரம்பகால போராட்ட நிகழ்வுகளைப் பின்னணியாக கொண்டு இந்த நாவல் எழுதப்பட்டுள்ளது. எமது இனத்தின் கடந்தகால வரலாற்றைத் தெரியாதவர்களுக்கும், எதிர்காலச் சந்ததியினருக்கும், இந் நாவல் பெரும் துணையாக விளங்கும்.

எழுத்தாளர் கலைஞர்களை ஊக்குவிக்கும்முகமாக 'தொண்டன்' வெளியீட்டகம் போன்ற ஸ்தாபனங்கள் எடுக்கும் முயற்சிக்குப் பொதுமக்கள் ஆதரவு வழங்கவேண்டியது அவசியமாகும். அப்படியென்றால்தான் இது போன்ற முயற்சிகளில் அவர்கள் தொடர்ந்து பணி

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# தேனருவி

ஆண்டின் 5-ம் ஞாயிறு (05-02-89)

## தாழ்ச்சிப் பூக்கள்

அமெரிக்க ஜனாதிபதியாய் இருந்த ஆபிரகாம் லிங்கன், அவருக்குப் பல பணியாளர் இருந்தும் தனது சப்பாத்தை தானே மினுக்குவாராம் காரணம், இவைபோன்ற செயல்கள் தனது தற்பெருமை எண்ணங்களை முடக்கிவிடும் என்றார்.

தோல்வி வெற்றியின் படிக்கட்டுகள் என்பர். காரணம், தோல்வியின் போதுதான் மனிதன் தன் உண்மைநிலையையும், தன் தகுதியின்மையையும், குறைபாடுகளையும் உணரச்சந்தர்ப்பம் பிறக்கிறது. அதைத் தகுந்த முறையில் பயன்படுத்துவோர் வெற்றியின் பாதையில் முன்னேறுகிறார்கள் "அகங்காரம் தூதர்களையும் அலகைகளாக்கும்; தாழ்ச்சி மனிதர்களையும் தூதர்களாக்கும்" என்கிறார் புனித அகுஸ்தினார்.

எந்தப் பதவியிலேயோ, பொறுப்பிலேயோ உள்ளவர்கள் தம் உயர்வுக்கு முன்னும் பின்னும் தமது உண்மை நிலையை மனக்கண் முன்னிலையில் வைத்திருத்தல் நன்மை பயக்கும். தன் பலவீனங்களையும், தன் இயலாமைகளையும் அடிக்கடி நினைந்து கொள்ளுதல் தற்பெருமையையும் அகங்காரத்தையும் எட்டத்தில் வைத்திருப்பதற்கு மட்டுமல்ல, நம ஆண்டவரில் நம்பிக்கைகொள்ளவும், அவர் எம்மில் வலுவுடன் செயலாற்றவும் இடமளிக்கிறது.

ஆண்டவரின் தெரிவும், அவரன்பும தாழ்ந்தவரின் பக்கம் என்றுதான் மீட்பின் வரலாறு கூறுகிறது. ஞாயிறு மூன்று வாசகங்களிலும் திருச்சபையின் 3 முக்கிய உயர்ந்தவர்களின் தெரிவும் தகைமையும் பற்றி எடுத்துக் கூறப்படுகிறது. இசையாஸ் என்ற ஒரு மனிதன், பாவச்சூழலில் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு பாவி அவர். ஆயினும் சேனைகளின் தூயவரான இறைவனால் பெரும் இறைவாக்கினராக ஏற்படுத்தப்பட்டார். இராயப்பர் ஒரு சாதாரண மீனவன். அதேவேளை அவர் வாழ்ந்த சமூகத்தில் கற்றுத்தேர்ந்த குருக்கள். சட்ட வல்லுனர்கள் பலரும் இருந்தனர். அவர்களது நுட்ப அறிவினாலும், சொல் ஆற்றலாலும், பலரை மனமாற்றக் கூடியவராயும் இருந்தனர். அது மட்டுமல்ல அச்சமூகத்தின் முக்கிய புள்ளிகளாக ரோமானிய அதிகாரிகளும், கிரேக்க மெய்யியல் அறிஞர்களும் கூட இருந்தனர். அவர்கள் செல்வாக்குனும் சிறப்புடனும் விளங்கினர். இவர்கள் அனைவரிலும் இராயப்பரே அதிகம் தகுதிபடைத்தவராக இயேசுவுக்குத் தென்படுகிறார். "இன்று முதல் மனிதர்களை பிடிப்பவன் ஆவாய்." என்று கூறி ஏராளமான மீன்களை வலைக்குள் வளைப்பது போன்று திரள்திரளான மக்களை இராயப்பரின் தலைமைக்குள் வளைத்துக் கொண்டார்.

அடுத்து, சின்னப்பர் கிறிஸ்தவர்கள் பலரைத் துன்புறுத்திய மாபாதகன். பல அப்பாவி மக்களின் படுகொலைக்கும் காரணமாய் இருந்திருப்பார். இருப்பினும் அவரை அப்போஸ்தலன் என்ற தானத்திற்கு உயர்த்தினார் இயேசு. புனித சின்னப்பர் இல்லையென்றால் புற இனத்தார் என்ற யூதர் அல்லாதவர், நாமும் கூட கிறிஸ்து என்ற ஒளியைக் கண்டிருப்போம் என்பது சந்தேகமே.

இசையாஸ், இராயப்பர், சின்னப்பர் போன்ற மூவரும் தம் அழைப்பின் முன்பு தகுதியற்றவர்களாய் இருந்தது உண்மை. ஆனாலும் அழைப்பின் முன்பும் பின்பும் தமது தகுதியற்ற தன்மையை அடிக்கடி உணர்ந்தார்கள் என்பது அதைவிடமுக்கிய உண்மையாகும். அதனால்தான் அவர்கள் உயர்ச்சியின் பொழுது முளைவிட்டிருக்கக்கூடிய அகங்கார உணர்வுகளை இனங்கண்டு கிள்ளிவிட முடிந்தது. தமது இயலாமையை உணர்ந்த இவர்கள் ஆண்டவரின் வல்லமையில் தங்கியிருக்கவும் அவரது வல்லமை தம்மில் செயலாற்றவும் இசைந்தும், நெகிழ்ந்தும் கொடுத்தனர்.

எவ்வாழ்விலும் தொடர்ச்சியான மனமாற்றம், அதனூடாக வரும் முதிர்ச்சி, அதில் பூக்கும் அருட்பூக்கள் அனைத்திற்கும் ஆணிவேராக ஊன்றியிருக்க வேண்டியது தகுதியற்ற நிலையை உணரும் தாழ்மை என்ற உயர் பண்பு.

—சுவாமி ஜீவா போல் அ.ம.தி.

இசை. 6: 1–8 இதோ, அடியேன் என்னை அனுப்பும்
1, கொரி. 15: 1–11 நானே அப்போஸ்தலர்களுள் மிகச்சிறியன்
லூக். 5: 1–11 ஆண்டவரே, பாவி என்னை விட்டு அகலும்

# மலரத் துடிக்கும் மொட்டுக்கள்

இளமைப்பருவம் ஒரு மொட்டு. அது மலர்ந்து மணம் வீசும் போததான் சமூகம் பயன் அடைகின்றது. இந்த இளமை எனும் மொட்டுக்கள் மலரவேண்டுமாயின் அவை தாமாகவே மலரமுடியாது. சமூகம் இந்த மொட்டை மலரச் செய்ய உதவிசெய்ய வேண்டும். இளமையின் தன்மை, குணம், இவற்றை அறிந்து புரிந்துணர்வுடன் இளமையின் குறை நிறைகளை, தவறுகளை நோக்கவேண்டும்.

இளமை எதையும் சீர்தூக்கிப் பார்க்கும் தன்மையுடையது. ஆய்ந்து அறிய வேணடும் என்ற ஆவலை அகத்தில் கொண்டது. தெரிந்துகொள்ள வேண்டும் என்பதில் தீவிரமாய் இருப்பது ஆழம் வரையிலும் சென்று மூழ்கிப்பார்த்து விடவேண்டும் என்ற வேட்கையுடையது.

எத்தகைய சவால்களையும் எதிர்நோக்கும் ஏற்றம்பெற்றது. பிறரன்பு, உண்மை போன்ற மனித மாண்பை வளர்க்கின்ற வளமையான செயல்கள் இட பூமியில் செயற்படுத்தப்பட வேண்டுமென்பது இளமையின் ஏக்கமிகு எதிர்பார்ப்பாகும். அநீதியை அழிக்க - உண்மைக்குப் புறம்பான செய்திகளைச் சிதைக்க அது என்றும் போராடுகின்றது போராடிக் கொண்டே இருக்கின்றது. ஆனால் இந்த இளமையை சுயநலக் கொடிகள் சுற்றிக் கொண்டால்விளைவுகள் விபரீதமாகிவிடும்.

இளமை உறுதியான உள்ளத்தையும், தெளிவான தன்மையையும் நாடுகன்றது. தன் வாழ்க்கையின் இலட்சியம் எண்ணி, அதன் முடிவு எண்ணி அந்த இலட்சியத்தின் இலக்கை அடைய தான் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்? என்பது போன்ற வலுவான எண்ணங்களால் தன்னைத் தானே வலுப்படுத்திக்கொள்கிறது.

ஏராளமான தாகங்கள் இந்த இளமை வானத்தில் மேகங்களாக உலவும். இளைஞர்கள் தவிப்போடு தாவி வருகின்ற தாக நதிகள். இனிய இளமையானது உண்மைமேல் தாகம் கொண்டுள்ளது. அது போன்றே வாழ வேண்டிய வாழ்க்கைக் கோட்பாடுகள், பொறுப்புணர்ச்சிகள், நல்லொழுக்கம், குற்றமற்ற தன்மை, மகிழ்ச்சி ஆகியவற்றின்மேல் துளிர்க்கவும், துலங்கவும் ஆசைகொண்டுள்ளது. வாழ்க்கையின் நெளிவு சுழிவுகளை நீக்கி நெறிமுறைகளை வகுத்துக் கொள்கிறது.

மொட்டுக்கள் மணம் கொடாது. அவை மலரவேண்டும். இளமை எனும்மொட்டும் இளமைத்தன்மையோடு இயங்கும்போதே மனம்வீச ஆரம்பிக்கிறது.

— தமிழ்நேசன்
புனித பிரான்சிஸ் சவேரியார்
குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை

அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை
3-2-1989

## நல்ல நட்பு




அன்பு இளம் உள்ளங்களுக்கு
அன்பு செய்யும்
ஆளை மறவாதே
அறன் வளர்க்கும்
நட்பைத் துறவாதே
நன்மை செய்யும்
நண்பனைப் பிரியாதே
நாணயம் தவறும்
நண்பனை நம்பாதே
நல்லதொரு நண்பனை
நலிதாக்க முயலாதே
சந்தேகக் கண்கொண்டு
சஞ்சலத்தை வளர்க்காதே,
சந்தி சிரித்திடவே
சிந்தியாமல் பழகாதே.
உயிரினைக் கொடுக்கும்
உறவினைக் கொடுக்காதே.
உண்மை பேசும்
உயிர்தனை உதருதே
உயிர் உள்ளவரை
உன்னை வெறுக்காதே

அன்பு நெஞ்சன் வி. பி.

## இளைஞனே!

இளைஞனே! வாழப் பிறந்த நீ
வாழ்க்கையைப் பாழாக்கலாமா?

இளைஞனே! அன்பு செய்து வாழப் பிறந்த நீ
அன்பு செய்ய மறுக்கலாமா?

இளைஞனே! சிரித்து வாழப் பிறந்த நீ
பிறர் சிரிக்க வாழலாமா?

இளைஞனே! உழைத்து வாழப் பிறந்த நீ
பிறர் உழைப்பில் வாழலாமா?

இளைஞனே புகலிடம் கொடுக்கப் பிறந்த நீ
புகலிடம் தேடலாமா?

இளைஞனே! உதவி செய்யப் பிறந்த நீ
உபத்திரவம் கொடுக்கலாமா?

இளைஞனே! ஒன்றித்து வாழப் பிறந்த நீ
அதை துண்டித்து விடலாமா?

இளைஞனே! நீதியை நிலைநாட்டப் பிறந்த நீ
அநீதியை விளைவிக்கலாமா?

இளைஞனே! வறுமையை ஒழிக்கப் பிறந்த நீ
வளமையை மறக்கலாமா?

இளைஞனே! தியாகம் செய்யப் பிறந்த நீ
இன்னும் தாமதிக்கலாமா?

சந்தியோகு பிரபா,
முதலை குத்தி உயிலங்குளம்.

## சிந்திக்க சிறு துளிகள்

வாழ்க்கை என்பதை கடலினுள் பயணம் செய்யும் படகுக்கு உவமிக்கலாம். இவ்வுலகில் மானிடராகப் பிறந்த ஒவ்வொருவனும் இந்த ''வாழ்க்கை'' எனும் படகிலே பயணம் செய்து ஒரு கரையை அடையவேண்டும். பயணம் செய்யும் பொழுது "சோதனை" அலைகளாலும் ''துன்பம்', எனும் புயலினாலும், 'வறுமை' எனும் கற்பாறையாலும் அலைக்கழிக்கப்பட்டு திசை திருப்பப் படுகின்றான். இதன் காரணமாக சில சமயங்களில் அடையவேண்டிய இன்பமான பூங்காவாகிய ''விண்ணகம்'' எனும் கரையைத் தவறி கல்லும் முள்ளும் நிறைந்த தீக்குழியையும் அடைகிறான். ஆனால் இது வல்ல நிறைவான வாழ்க்கை. ''பொறுமை'' யெனும் சுக்கானை இறுக்கிப் பிடித்து ''சோதனை'' எனும் அலையையும் ''துன்பம்'' எனும் புயலையும் ''வறுமை'' எனும் பாறையையும் கடந்த இனிமையான பூங்கா எனும் கரையாகிய விண்ணரசை அடைவதே நிறைவான வாழ்க்கை ஆகும்.

— டெனிஸ்லாஸ் யோசவ்

## கண்ணை மூடினாலும் கண்ணருவியே

ஒரு பகல் வேளை
ஒரு கனவு நான் கண்டேன்,
எம் இளைய தலைமுறையின்
கண்ணருவி வஷய மெல்லாம்
கனவாக வந்தது.
கண்மூடி இருக்கையிலேயே
இத்தனை மோச மென்றால்
கண்ணைத் திறந்து பார்த்தால்
எத்தனை இழிவுகள் தான்.
எனவே நான்
கண்ணைத் திறந்து
கனவை கலைத்து
கண்ணிரண்டையும்
கைகளினால் பொத்திக்
— கொண்டேன்

நெடுநகர் சுதா



20-2-88 உடன் குடும்பம் ஒரு கதம்பம் பகுதி தனது ஈ-ம் ஆண்டைநிறைவு செய்தது. இத்தினத்தை நினைவு கூரும் முகமாக கடந்த இரண்டு காலமாக எமக்கு எழுதப்பட்ட கட்டுரைகளின் முக்கிய பகுதிகளையும், இன்னும் வெளிவராத பகுதிகளையும் அடுத்து வெளியிடுவோம்.

எமக்கு வந்த கடிதங்களையும் அவற்றின் சில பகுதிகளையும் வெளியிடுகிறோம்.

★ ★ ★

## திருமணத் தடைகளிலிருந்து விலக்கிடு

(சென்றவாரத் தொடர்ச்சி)

பல ஐயமின்றி, திருச்சபைச் சட்டத்தால் ஆனவைகள் இவைகளிலிருந்து திருச்சபை நியாயமான, தக்க காரணங்களுக்காக விலக்கீடு அளிக்கலாம் சாதாரண சூழ்நிலைகளில் திருப்பட்டம், பாப்பரசரால் அங்கீகாரம் பெற்ற துறவற சபைகளில் எடுக்கும் பொதுவான நிரந்தர கற்பு வார்த்தைப்பாடு, பாதகம் என்ற திருமணத் தடைகள் நீங்கலாக, மற்றெல்லாத திருச்சபைத் தடைகளிலிருந்தும் விலக்கீடு அளிக்க அந்தந்த இடத்து ஆயருக்கு முழு அதிகாரம் உண்டு (தி. ச. 1078)

மரண ஆபத்திலிருக்கும்போது குருப்பட்டத்தால் ஏற்படும் திருமணத்தடையைத் தவிர மற்றெல்லாத் திருச்சபைத் தடைகளிலிருந்தும் விலக்கீடு அளிக்க. ஆயருக்கும், ஆயரை அணுகமுடியாத நிலையில் பங்குக் குரு, திருமணம் நடத்த அங்கீகாரம் பெற்ற திருத்தொண்டர் போன்றவருக்கும். பாவசங்கீர்த்தனம கேட்பவருக்கும் அதிகாரம் உண்டு (தி. ச. 1079).

திருமணம் நடத்த எல்லாம் தயாரானபின் திருமணத் தடைகளை அறியவரும்போதும். ஆயருக்கும் ஆயரை அணுகமுடியாத நிலையில் மேலேகுறிப்பிட்ட பங்குக்குரு, திருமணம் நடத்த அங்கீகாரம் பெற்ற குரு, திருத்தொண்டர் போன்றவருக்கும், பாவசங்கீர்த்தனம் கேட்பவருக்கும், திருச்சபைத் தடைகள பலவற்றிலிருந்து விலக்கீடு அளிகக அதிகாரம் உண்டு (தி. ச. 1080)

திருச்சபையின் திருமணமுறை (Canonical Form)

கத்தோலிக்கத் திருமணம் சமுதாயத்திலும் திருச்சபையிலும் நிகழும் ஒரு நிகழ்ச்சி எனவே அது சமூகமும் திருச்சபையும் காணும் வகையில் நிகழவேண்டும். ஆகவே திருச்சபை நியமித்த முறைப்படி கத்தோலிக்கர்களின் திருமணம் நடத்தப்படாவிட்டால் அத்திருமணம் செல்லாது (தி. ச. 1108).

''அந்தந்த இடத்து ஆயர், அல்லது பங்குக்குரு, அல்லது இவர்களில் ஒருவரால் அங்கீகாரம்பெற்ற குரு அல்லது திருத்தொண்டர் முன்பாகவும் அவரது பங்கேற்போடும் (assistance) இரண்டு சாட்சிகள் முன்பாகவும் நடத்தப்படும் திருமணம்தான் செல்லுபடியாகும்''.

''நேரடியாகப் பிரசன்னமாயிருந்து, தமபதிகளின் சம்மதத்தைக்கேட்டு. அதைத் திருச்சபையின் பெயரால் ஏற்பவர்தான் திருமணத்தில் திருச்சபையின் பெயரால் பங்கேற்கும (assist) ஆளாகக் கருதப்படுவார்'' (தி ச 1108 பிரிவு 1, 2)

6 திருமணத்திற்கு முன் காட்டவேண்டிய அக்கறையும் செய்ய வேண்டிய தயாரிப்பும்

மனித சமூகத்தின் அடிப்படையான உயிர் அணு குடும்பமாகும். திருச்சபையின் அடிப்படையான உயிர் அணுவும் ''இல்லத் திருச்சபை'' என அழைக்கப்படும் குடும்பமே. எனவே குடும்பநலத்திற்காக ஆற்றவேண்டிய மறைத்தூதுப் பணி (apostolate) அதி முக்கியமான, முதன்மையான பணியாகும். கிறிஸ்தவ சமூகத்தின் ஒத்துழைப்பொடு திருமணத்திற்கு இறைமக்களைத் தகுந்த முறையில் தயாரிப்பதைக் குருக்கள் தங்கள் மேயப்புப் பணியின் ஒரு முக்கிய கூறுகக் கருத்தில் கொண்டு செயல்படவேண்டும். இதைத் தி. ச. 1063 தெள்ளத் தெளிவாக வலியுறுத்தி, கோடிட்டுக் காட்டுகிறது.

''திருமண நிலை கிறிஸ்தவப் பண்பில் நிலைபெற்றிருக்கவும், நிறைவில் உயர்ந்தோங்கவும் தத்தம் திருச்சபைச் சமூகம் கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு உதவிகளை வழங்க மேய்ப்புப், பணிக் குருக்கள் அக்கறைகாட்டி ஆவன செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

(தொடரும்)

— அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை




திருமறைப்பணி நிலையம்
த. பெ. இல. 2,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்

## சிறிய இறைவாக்கினர்-11

**யோவேல்—3**

இந்நூலின் முதல் பகுதியில் வெட்டுக்கிளிக் கொள்ளைநோய் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி யாவேயின் நாளின் வருகைக்கு ஒரு எச்சரிக்கையாகவும் முன் அனுபவமாகவும் உள்ளது. இரண்டாம் பகுதியில் இறுதிக்கால முடிவு பற்றி பல காட்சிகளையும் யாவேயின் நாளுக்கு முன்வரும் நிகழ்ச்சிகளையும் இறைவாக்கினர் யோவேல் விபரிக்கிறார்.

மேலும் யாவேயின் நாளில் புதிய யுகம் தோன்றும், இப் புதிய யுகத்தில் எல்லா மக்கள் மேலும் இறைவன் தமது ஆவியைப் பொழிவார். அவர்கள் அனைவருக்கும் இறைவாக்குரைக்கும் கொடையை அளிப்பார். கடந்த காலங்களில் தலைவர்கள், நீதிபதிகள், அரசர்கள், இறைவாக்கினர் ஆகியோர்மேல்தான் ஆண்டவருடைய ஆவி அருளப்பட்டது. மெசியாவின் காலத்தில் எல்லார் மேலும் ஆவி அருளப்படுவார் என்று யோவேல் இறைவாக்கினர் கூறுகின்றார்.

யாவேயின் நாளின் வருகை ஆவியின் ஆற்றல் மிக்க தோற்றத்தால் மட்டுமன்றிப் பிற வியத்தகு அடையாளங்களாலும் முன்னறிவிக்கப்படும். பூமியில் போர், இரத்தம், நெருப்பு எரியும் நகரங்கள் இவை யாவேயின் நாளுக்கு அடையாளங்களாய் அமையும் என்று கூறுகின்றார். யாவேயின் நாளின் அடையாளங்களாக நிகழ்பவற்றின் அச்சத்தால் உந்தப்பட்டு ஆண்டவரின் பெயரைச் சொல்லி மன்றாடுபவர்கள் மீட்புப் பெறுவார்கள் என்று கூறுகின்றார். விசுவசிப்போர் மீட்புப் பெறுவர். அதேவேளையில் பிறநாடுகள் கண்டனம் பெறும் என்றும் அறிவிக்கிறார்.

இறுதித் தீர்ப்புப் பற்றிக் கூறிய யோவேல் புதிய யுகத்தின் ஆசீர்களை உருக்கமாக எடுத்துரைப்பதுடன் தனது நூலை முடிக்கின்றார். நாடும் நகரமும் மாற்றி அமைக்கப்படும். எருசலேம் இனி ஒருபோதும் பிற இன மக்களால் பங்கப்படாது. அது பரிசுத்த நகரமாகவும், முடிவில்லா நகரமாகவும் இறைவன் உறையும் இல்லமாகவும் இருக்கும்.

யோவேல் ஆகமம் முழுவதும் வழிபாட்டுப் பண்பு காணப்படுகின்றது. வேதனைகளும், துன்பதுயரங்களும் இழப்புக்களும் மக்களின் வாழ்வைப் பாதிக்கும்போது தபசும் மன்றாட்டுகளும் அடங்கிய பொது வழிபாடு இடம்பெறவேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. இறைவாக்குப் போதகத்தில் எதிர்பார்க்கப்படும் ஓர் அடிப்படைப் பண்பு இதுவாகும்.

யோவேல் ஆகமத்தைப் படிக்கும்நாம் எமதுவாழ்வில் நினைக்கின்றநிலையற்ற துன்பவேதனைகளில், இறைவனின் கரம் இருக்கின்றது என்பதை உணர்ந்துகொள்வோம். நிலையான துன்பவேதனைக்கு உட்படாதவாறு மனம்மாறி இறை ஆசீர்களைப் பெறுவோமாக.

—கி. சா. பங்கிராஸ்

**அறிந்து கொள்ளுங்கள் 66**

### ஆசாரக் கூடாரம்

பொன் கன்று வழிபாடு உண்மைத்தலைமைக்கும், போலித் தலைமைக்கும் உள்ள வேறுபாட்டை காட்டுகிறது. ஆரோன் எதுவும் செய்ய முடியாதவராக மக்களின் விருப்பத்திற்கு இணங்குகிறார். மோயீசன் மக்கள்மேல் அன்புள்ளவராக நீதி உண்மை உடையவராக இறைவனுக்கு மட்டும் பணிபவராகக் காணப்படுகிறார். மக்களை வழிநடத்துகிறார். இவ்வழியாக உண்மைத்தலைவராகிறார் மோயீசன்.

இதன் பின் மோயீசன்புதிய வழிபாட்டுமுறையை அமைக்க முயல்கிறார். இறைவனை வழிபட ஆசாரக்கூடாரம் அமைக்கப்படுகிறது. இக்கூடாரத்தின் அமைப்பு முறை இறைவனால் கூறப்பட்டதாக யாத்திரையாகமம் கூறுகிறது. (யாத் 26 ம் அதி) கூடாரத்தில் பல பிரிவுகள் உண்டு. மிகவும் முக்கியமான'' மிகவும் புனித இடம்'' என்ற கருவறை மூலஸ்தானம்) இங்கு தான் சட்டப்பலகை உள்ள பேழை வைக்கப்பட்டிருந்தது. அதற்கு முன் தூயகம் என்ற இடம். இங்கு தூபப்பீடம், காணிக்கை மேசை, ஏழுகிளை விளக்கு வைக்கப்பட்டிருந்தது. தூயகத்திற்கு முன் உள்ள இடம் முன்தலாம், இங்கு மக்கள் கூடி மிருகங்களை இறைவனுக்கு பலியிட்டனர். யாத். 36 ம் அதிகாரம் கூடாரம் அமைக்கப்படும் விதம் பற்றிக் கூறுகிறது. ஆசாரக்கூடார அமைப்பு இந்துக்கோவில் அமைப்புப் போன்றது.

யாத் 28-ம் அதிகாரம் குருக்களின் திரு உடைபற்றி கூறுகிறது. முதலில் மெல்லிய உடை அணியவேண்டும். அதற்குமேல்

(தொடர்ச்சி 7 ஆம் பக்கம்)

## பழமொழி ஆகமமும் புதுமொழியும்.

நம்மில் பலர் அலரைகுறையாக ஏதும் அறிவைப் பெற்றுவிட்டால் தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்று பீற்றிக் கொள்வார்கள். மற்றவர்கள் அனைவரும் மூடர்கள், மகியீனர் என்று தலைகால் தெரியாமல் தாண்டவம் ஆடுவார்கள்.

சற்று ஒரு பொறுப்பை அவர் மேல் சுமத்தி விட்டாலோ தனக்கு முன் அப்பொறுப்பு வகித்தவர்களையும், அவர்கள் நிர்வாகத்திறமைகளையும் ஏளனம் செய்து, தான் தான் சகலகலாவல்லவன் என சத்தமிட்டுக் கூறுவார்கள்.

இப்படிப்பட்டவர்களை திருநூல் இவ்வாறு சாடுகிறது.

''கற்றவன் அறிவைப் பாராட்டாமல் மறைக்கிறான். மகியீனனின இதயமோ அறிவீனத்தை வெளிக்காட்டுகிறது'' என்று 12/23 ல் எள்ளி நகை ஆடுகிறார்.

இதற்கு நம் முன்னோர் ''நிறைகுடம் தழும்பாது குறைகுடம் கூத்தாடும்'' என்று அழுத்தத்துடன் கூறியுள்ளனர்.

இன்று நம்மில் பலர் தேவைகள் அதிகமாக இருப்பினும் கூச்சத்தினலோ மற்றவர்கள் தன்னைப் பற்றி என்ன எண்ணுவார்கள் என்ற தப்பான அபிப்பிராயத்தினலோ ஒளிந்துகொள்கிறார்கள். இவர்களைப் பார்த்த நம் ஆன்றோர் அழகுறக் கூறுகிறார்கள்.

''வாய் உள்ள பிள்ளை பிழைக்கும்''

''அழுகிற பிள்ளை பால் குடிக்கும்'' என்று இரு சொற்களில் இவர்களின் வாழ்வை அம்பலப் படுத்துகிறார். திருநூலோ 13/2 ல் ''தன் வாயின் கனியால் மனிதன் திருப்தி அடைவான். துரோகிகளுடைய ஆன்மாவோ தீயதாம்'' என்று விட்டுக்கொடுக்காமல் பதிலடி கொடுக்கிறார்.

இது எப்படி இருக்கு?

நமது வாழ்விலே அன்றாடம் உழைக்கவேண்டும்-உயரவேண்டும் ஏனையோர்களைக் காட்டிலும் நாம் மதிப்பு மிக்கவர்களாக- மற்றவர்களால் பாராட்டப் படக்கூடியவர்களாக ஒரு உயர்ந்த அந்தஸ்தில் வாழவேண்டும் என்ற அபிலாசைகள் மனிதனுகப் பிறந்துவிட்டபடியால் நம் ஒவ்வொருவருக்கும் இருக்கத்தானே செய்கிறது

ஆனல் ஏனைய மதங்கள் ''கர்மம் ''வினை'' ''விதி'' என்று கூறி சமாளித்துக்கொள்கிறார்கள்

இறை அனுபவத்திலே ஊன்றித் திளைத்த- அதிலே வாழ்ந்து வெற்றிகண்ட நமது ''திருநூல்'' ஆசிரியர் இப்படிக் கூறுகின்றார்.

''தீய தூதன் தீமையில் விழுவான் - பிரமாணிக்கமுள்ள பிரதிநிதிக்கோ நலம் கிட்டும்'' என்று 13/17 ல் மேலான இறை நீதியைக் கூறுகின்றார்.

விட்டுக் கொடுக்காத நம் முன்னோர், இதற்கு இணையாகக் கூறும் முதுமொழி''

''விதை ஒன்று விதைக்க- சுரை ஒன்று முளைக்குமா'' என்கின்றனர்.

உங்கள் அன்பன்
எஸ். ஏ. நாதர்.




| ஒளி: 3 | எம் விழிகளின் ஒளி யேசு |
|---|---|
| சுடர்: 5 | எம் வாழ்வின் வழி யேசு |

### பாடுங்கள் பாட்டுப் பாடுங்கள்.

**கடமை:**

1. பண்ணென்று போயின்—இசைப்
பாட்டென்ன ஆகும்?
பண்பு நீங்கிப் போயின்—வரும்
புகழும் என்ன ஆகும்?

2. சொல்லொன்று போயின்—நில
மொழியென்ன ஆகும்?
அல்வந்து விட்டால்—ஒளி
அதுவும் எங்கு போகும்;

3. அன்பு நீங்கிப் போயின்—இந்த
அவனியென்ன ஆகும்?
நன்று நீங்கிப் போயின்—வந்த
நசையுமென்ன ஆகும்?

4. மடமையென்ப தழியின்—பெருங்
கடமையுணர்ந்து பெருகும்
கடமை என்ப தழியின்—உயர்
கவினும் மாய்ந்து மடியும்.

5. கடமை மக்களின் உயிராம்—உயிர்
கடமை மக்களின் பயிராம்
மடமை என்பது களையாம்—அதில்
மதிப்பு என்பது இலையாம்.

எழுதியவர்: இசைப்புலவர் கா. சாம்ராஜ் எம். ஏ.

★ ★ ★

### வாரம் ஒரு வார்த்தை:

என்னைப் பின் செல்ல விரும்புகிறவன் தன்னையே மறுத்துத் தன் சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின் தொடரட்டும்.

மத். 16: 24
லூக். 9: 23

### பேசும் விழி:

அன்புக் கண்மணிகாள்!

தியாகத்தலைவர் நம் யேசுவின் வழிகாட்டல் என்றும் உம்முள் நிறையட்டும்.

'காற்றில் கலந்தவை' என்ற நூலில் 1977இல் காவையூர்ச் செல்வம் அவர்கள் எழுதிய வாசகத்தை உங்களுக்குத் தருகிறேன். படியுங்கள்! ஊன்றிப் படியுங்கள்!!

இன்றைய உலகில் கண்டு பிடிக்கும் ஒவ்வொரு சக்தியையும் ஆக்கத்திற்கும் பயன்படுத்துவதைவிட அழிவிற்குப் பயன்படுத்துவதே பழக்கமாகி விட்டது; குறுக்கு வழியாகிவிட்டது.

இங்குதான் நிதானமாக நின்று நாம் சிந்திக்க வேண்டியவர்களாவோம்,

உன்ன உணவில்லாவிட்டால் உயிரைக் கொல்வதா? உற்பத்தியைப் பெருக்குவதா?

அறியாமையை அகற்ற அறிவை வளர்ப்பதா? ஆட்களை அழிப்பதா?

நோயைக் குணமாக்க மருத்துவத்தை வளர்ப்பதா? அன்றேல் மக்களைக் கொல்வதா?

தாழ்ந்திருப்பவற்றை உயர்த்த வேண்டுமேயொழிய உயர்ந்திருப்பவற்றைத் தாழ்த்தக் கூடாது.

ஆக்குவோம், அழியோம், புதிய உலகம் படைப்போம்—புதிய சமுதாயம் படைப்போம்,

உலகைப்படைக்குமுன்—சமுதாயத்தை ஆக்குமுன் முதல் முதலில் என்னை மாற்றி அமைக்க வேண்டும்.

அன்புக் கண்மணிகளே! எம்மை மாற்றி அமைக்கும் அருமையான காலம் தவக்காலம் என்பதை மறக்கவேண்டாம்.

அன்பின்
அன்பு விழி.

## உங்களுக்குத் தெரியுமா? போட்டி 21

பாதுகாவலன் பத்திரிகையில் (நவ 25- ஜ.ன.27வரை) வினவு குரிய சரியான விடையைக் கண்டுபிடித்து விடை இலக்கத்தையும் விடையையும் தபால் அட்டையில் தெளிவாக எழுதி 30-2-89க்குமுன் பாதுகாவலன் அ. பெ. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள், விடையும் பரிசு பெறுபவர் பெயரும் அடுத்த போட்டியும் 10-3-89இல் வெளிவரும்.

வினுக்கள்

1. 'கிறிஸ்தவ பத்திரிகையாளர் உண்மைக்கும் நீதிக்கும் போராடவேண்டும்' என்று குரல் கொடுத்தவர் யார்?

2. கேரள அயர் பேரவையின் சமூகத் தொடர்பு ஆணைக்குழு நடாத்திய போட்டியில் புதுமையான அமைப்புக்காகப் பரிசுபெற்ற நாடகத்தின் பெயர் என்ன?

3. 'சபைகள் எல்லாம் உரோமையுடன் அன்று, கிறிஸ்துவில் இணைய வேண்டும்' என்று வலியுறுத்தியவரின் பெயர் என்ன? அவர் எந்நாட்டைச் சேர்ந்தவர்?

4. ஹொங்ஹொங் மறை மாவட்டத்திலுள்ள கத்தோலிக்க குருமடத்தின் இறையியல் பேராசிரியரின் பெயர் என்ன?

5. திருக்குடும்பத் திருப்பாலத்துவ சபை எங்கே?, யாரால்? ஆரம்பிக்கப்பட்டது.

6. ஒரே வம்ச அடியில் பிறந்தவர்களுக்குள்ளே உள்ள உறவுத்தை எவ்வாறு அழைப்பர்?

### போட்டி 20 சரியான விடைகள்

(1) பேரருட்திரு தோமஸ் சுருநிலைக் கூறே, 1947இல்
(2) வண பிதா. அன்செலம் சில்வா, அ. ம. தி,
(3) அருட் செல்வி, ஜீவயதம்பி கிறிஸ்ரபெல்,
(4) சேக்கிளார் அடிகளார்
(5) 1988 ஒக்டோபர் 16 ஆம் திகதி, வத்திக்கானில்,
(6) 1988. மே, 22ஆம் திகதி. வத்திக்கானில்,

சரியான விடை எழுதியோர்

(1) ஷியாமா அகஸ்ரின், 7, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ். (2) சிறில் சாந்தி கிறெஸ், நவாலி (3) அ. மோசேஸ்தேவரத்தினம், தும்பளை, பருத்தித்துறை (4) அ. பிலிப்ஸ் விஜயரத்தினம், தும்பளை, பருத்தித்துறை. (5) செல்வி மேரி மரியாம்பிள்ளை 225 தும்பளை வீதி, பருத்தித்துறை. (6) ஏ நூர்மா, 10ம் வட்டாரம் புங்குடுதீவு. (7) எல் தே கா, 10ம் வட்டாரம் புங்குடுதீவு (8) ஏ. அகஸ்ரின் யூட் அல்வின். செல ஜேம்ஸ் இளவாலை (9) சி. சிவகாந்தன், 14/2 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், (10) J. S. அன்ரனி, மணிப்புரி கொழும்புத்துறை யாழ்ப்பாணம், (11) ஜே.தியன் சோசை, 1ம்வட்டாரம் வங்காலை (12) ஜே. தீபா சொய்சா, 1ம் வட்டாரம் வங்காலை, (13) ஜே. அகிலன் சோசை, 1ம் வட்டாரம் வங்காலை, (14) ஜே. ஜோ சொய்சா, 1ம வட்டாரம் வங்காலை.

பரிசுபெறும் நற்பேறுளர்

ஷியாமா அகஸ்ரின், 7, 4ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

## ஆன்ம அழைப்பில் முதல் வருட நிறைவு



திருமதி ஆரோக்கியம் இறப்பியேல்பிள்ளை

| மடியில் | அடியில் |
|---|---|
| 05-05-1902 | 07-02-1988 |

விசுவாசிகளுக்கு வாழ்வு மாறுபடுவதே அன்றி அழிக்கப் படுவதில்லை.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 7-2-1989 செவ்வாய்க்கிழமை காலை 6-30 மணிக்கு கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்திலும், யாழ்ப்பாணம் புனித அடைக்கலமாதா ஆலயத்திலும் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலிகளில் பங்குபற்றி இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றுடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.

A/21

## பருத்தித்துறைப் பங்கில் மாதா கண்காட்சி

இடம்: பருத்தித்துறை சென்தோமஸ் றோ. க. பாடசாலை.
காலம்: 5, 6, மாசி 1989. (ஞாயிறு, திங்கள்)

A/23 பங்குத் தந்தை.

## அறிந்துகொள்ளுங்கள் (6ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேலைப்பாடுகள் உடைய விளிம்புகளை கொண்டநீண்ட அங்கி அணியவேண்டும், இதற்குமேல் அணியும் ஆடைக்கு "எப்போத" என்று பெயர். இது இன்று நம் குருக்கள் பலிக்கு அணியும் ஆயத்தம் போன்றது இது அதிக வேலைப்பாடு உடையதாக இருக்கும். இதற்கு மேல் மார்புதகம் அணியப்பட்டது முடிவு எடுக்கும் மார்பு பதக்கம் என்று அழைக்கப்பட்டது இதில் ஒரு பை உண்டு இதில் 'உரிம்' 'தும்மி' என்ற பொருள்கள் வைக்கப்பட்டிருக்கும். இறைவனோடு வழக்கான கலந்தாலோசிப்பதற்காய் எடுத்துச் செல்லும் சீட்டாக அல்லது கோவில் வழிபாட்டுக்குரியவரை நிர்ணயிக்கும் குலுக்கல் துணையாக இருக்கலாம் என்று அறிஞர் கருதுகின்றனர். இம்மார்பு பதக்கத்தில் பதுமராகம், புஷ்பராகம், மரகதம், சூரியகாந்தம், மாணிக்கம் நிலமணிவச்சிரகம் போன்ற இரத்தினக் கற்கள் பதிக்கப்பட வேண்டும் (யாத். 28 ம் அதிகாரம்)

குரு கிரீடம் அணிய வேண்டும். இதில் 'கடவுள் பரிசுத்தமுள்ளவர்' என்றவாக்கியம் எழுதி நெற்றியில் கட்டவேண்டும். இப்படியாக வழிபாட்டு இடமும் வழிபாடு செய்யும்குருவின் ஆடைகளும் தயாரிக்கப்பட்டன. — இ. ம. ஜெயசீலன்

## விண்ணக வாழ்வின் 31-வது நாள் நினைவு அஞ்சலி



திரு. லியோ. பிலிப். பற்றிக்
ஓய்வுபெற்ற நீர்பாசன இலாகா மேற்பார்வையாளர்

ஆண்டவர் தாமே
என் உரிமைச் சொத்து
அவரே என் கிண்ணம்
எனக்குரியதை எனக்கென
வைத்திருப்பவர் நீரே;
மகிழ்ச்சியூட்டும் இடத்தில்
எனக்கு பங்கு கிடைத்து
என உரிமைப்பேறு எனக்கு
நேர்த்தியானதாயிற்று
(சங். 15, 5-6)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு மன்னாரில் வசித்து இறைவனடி, எய்திய எங்கள் அன்புத்தெய்வமே! எங்களுக்கு அன்பையும் தந்தையும் வழிகாட்டியுமாக நின்று எங்களின் உயர்வுக்காகப் பணியாற்றிய தாங்கள் இறைவனடி சேர்ந்து இன்றோடு முப்பத்தியொரு நாட்கள் பூர்த்திபெறும் இவ்வேளையில் தங்கள் ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் ஆன்ம சாந்திக்காக மன்னார் புனித. செபஸ்தியார் பேராலயத்தில் 26-1-89 காலை 9-00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பிள்ளைகள்:-
(மறையாசிரியர்) மேரி பற்றிக், அருள். சகோ. மேரி. பேப்பச்சுவா (சகாயமாதாசர்,சபை), அன்ரன் பற்றிக், குளோடியஸ் பற்றிக், மாகிறற் பற்றிக், றபேகாபற்றிக்,
சகோதரி:- ஜறின் எதிர்வீரசிங்கி
சின்னக்கடை,
மன்னார் A/18

## புனிதர் வழியில்

பெப் - 4:

புனித அருளானந்தர் :

புனிதர் 1647 ஆம் ஆண்டு லிஸ்பன் நகரில் பிறந்தார், புனித சவேரியாரைப் பின்பற்றியேசுசபையில் சேர்ந்தார். புனிதர் ஒருவனுக்கு ஒருத்தி என்ற இல்லற ஒழுக்கப்பாட்டுக் கற்பொழுக்கத்தை வலியுறுத்திப் போதித்ததன் விளைவாக 1693 ம் ஆண்டு பெப்வரி 4 ஆம் நாள் வேதசாட்சியாக மரித்தார். 1947 ம் ஆண்டு புனிதர் பட்டம் பெற்றார்.

பிப்-8; புனிதன் எமிலியன் எரோணிமுஸ் : புனிதர் வெனிஸில் 1486ஆம் ஆண்டில் பிறந்தார்; இராணுவ சேவையில்சிறு பட்டார்புனிதர் ஏழைமக்களின் புனர் வாழ்விற்காக அயராது உழைத்து பொனாமோ வட்டாரத்திலுள்ள சொமாஸ் - கோவில்1537ஆம் ஆண்டு பிப்ரவரி 8ஆம் நாள்மரணமானார். 1867 ஆம் ஆண்டு புனிதராக உயர்த்தப்பெற்றார்.

பிப்ர-10; புனித கொலஸ் திக்கமாள்: புனித பெனடிக்றின் சகோதரியான இப்புனிதை இத்தாலியின் மையத்தில் உள்ள உம்பிரியா வட்டாரத்தில் நோர்சியாவில் ஏறத்தாழ 480 ஆண்டு பிறந்தார். அவ்வம்மையார் இறந்தபின் ஏறத்தாழ 547ஆம் ஆண்டில் காசினோ மலையில அடக்கம்பண்ணப்பட்டதாக நிணவுகூரப்படுகின்றது.

செல்வன்
எஸ். ஏ. குமார்

## 25ஆம் ஆண்டு நினைவு தினம்

புவக்கீன்பிள்ளை அன்ரன் யோர்ஜ்

| மலர்வு: | மறைவு: |
|---|---|
| 24-03-1942 | 04-02-1964 |

அன்புத் தந்தையே இறைவா, எம்மிடமிருந்து உம்மிடம் நீர் அழைத்த எம் சகோதரன் யுவகீன்பிள்ளை அன்ரன் ஜோர்ஜ் கிறிஸ்துவின் மீட்புச் செயலில் உம்மோடு என்றும் மகிழ்ந்திருக்கச் செய்யவேண்டுமென்று உம் இரக்கத்தை இறைஞ்சுகின்றோம்.

இவரின் ஆன்ம சாந்திக்காக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் 4-02-1989 சனிக்கிழமை காலை 6-15 மணிக்கு இரங்கல் திருப்பலியில் பங்கு பெறும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

சகோதரர் குடும்பத்தினர்,
847, கடற்கரை வீதி,
பாஷையூர்.

A/24

## 31-ம் நாள் நினைவஞ்சலி

சந்தியோகு பெனுன்டோ ஜெயசீலன்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 25-11-1951 | 6-01-1989 |

எம்குடும்பத்தின் திருவிளக்காய் எம்மக்கெல்லாம் ஒளியீந்த எமைப்பிரிந்த அன்புத் தெய்வமே உங்கள் பிரிவால் தினமும் வாடுகின்றோம், உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி, அருமைப்பிள்ளைகள், அன்புத்தாய், சகோதர சகோதரிகள், மாமா மாமி, மச்சான் மச்சாள்மார், உற்றார் உறவினர்,

பள்ளிமுனை,
மன்னார் A/20

## எமது இனப்...

(4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாற்ற முடியும். இலட்சக்கணக்கான ரூபாய்களை வெளிநாட்டு நூல்களை வாங்குவதற்காக எமது நூல விற்பனையாளர்கள் முற்பணமாகவே முதலீடு செய்து அந்நூல்களை இங்கு இறக்குமதி செய்து அவற்றை விற்பனை செய்வதில் காட்டும் அக்கறை உள்ளூர் வெளியீடுகளின மட்டில காட்டப்படுவதில் என எமது உள்ளூர்ப் படைப்பாளிகள் கவலைப்படுகின்றனர். இந்த நிலை மாறி எமது நாட்டின் படைப்பாளிகளின் ஆக்கங்களை விற்பனை செய்வதில், வாங்குவதில் நாம் கூடிய ஆர்வம் காட்டி அவர்களை ஊக்குவிக்கவேண்டும் என அவர் எடுத்துக்கொண்டார்.

இவ்விழாவுக்கு முனைநாள் அதிபர் வித்துவான் சா. இ. கமலநாதன் தலைமை தாங்கினார். நூலின் முதற்பிரதியை மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் திரு. பூ. சங்கார வேல அவர்களிடமிருந்து அருள்திரு. பயஸ் பதமநாதா அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற போராட்ட வரலாறு நூல் எனபதனுல் அந்நாவில் போர்கள்களும், அமரர் சந்திராபெர்ணாண்டோ அடிகளாருக்கு இந்நாவல் சமர்ப்பணம் செய்யப்பட்டது என்பதனுல் சந்திராபெர்ணாண்டோ அடிகளாரின் அன்னை திருமதி. இக்னேசியா பெர்ணாண்டோ அவர்களும் இவ்விழாவில கலந்து கொண்டு சிறப்புப்பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

திருவாளர்கள் அன்புமணி, இராஜதுரை ஆகியோர் நூலுக்கு ஆயவுரை வழங்கியதைத் தொடர்ந்து நூலாசிரியர் பதிலுரை வழங்கினர். வரவேற்புரையை தொண்டர் ஆசிரியர் அருள்திரு. பி. யோசப் அவர்களும், நன்றியுரையை திரு. மலர் வேந்தனும், நிகழ்த்தினர்.

நூலாசிரியர் நாவண்ணன் விழாத்தலைவர் கமலநாதன் அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

## புதுக்குடியிருப்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளார்:- திரு. ஜ. சி. கந்தையா (முன்னாள் அதிபர்) புதுக்குடியிருப்பு புனித வளன் ஆலயம், பொருளாளர்: திரு. யோ. தாவீது,(அதிபர்) வல்லயன்மடம் புனித செபமாலைமாதா ஆலயம், நிர்வாக உறுப்பினர்கள்:-

திரு. பி. சே. எட்வேட்ராசா (ஆனந்தபுரம், புனித செபஸ்தியார் ஆலயம்) செல்வி. அ. புனிதசீலி (இரணைப்பாலை புனித பத்திமாமாதா ஆலயம்) திருமதி. கி. மரியமலர் (புதுக்குடியிருப்பு புனித வளன் ஆலயம்), திருமதி, வா, நிர்மல (புதுக்குடியிருப்பு புனித வளன் ஆலயம்) (ஆசிரியை)

தகவல்:- புனிதா

பாதுகாவலன்
PATHUKAVALAN

# மதங்களுக்கிடையிலான உரையாடலில் பயிற்சி

இந்திய ஆயர் பேரவையின் ஒன்றிப்பு உரையாடல்பற்றிய ஆணைக்குழு மதங்களுக்கிடையிலான உரையாடல்பற்றிய ஒரு பயிற்சித் தொடரை நாகபூர், ராய்ப்பூர், பல்காத், விஜயவாடா என்னும் இடங்ளில் நடத்தவிருக்கிறது.

இவற்றில் முதலாவது பயிற்சி டிசம்பர் 3-4 ம் திகதிகளில் பிதா மத்தியூ தயில் தலைமையில் நாகபூரில் நடைபெற்றது. இதில் பங்குபற்றிய 50 துறவற சபை அங்கத்தவர்கள் பன்மறைப் பிராத்தனை, பல்வேறு கலாசாரங்களை புரிந்து கொள்ளுதல் ஆகியவற்றை அனுபவ ரீதியாக பயின்றனர். மதமாற்றம், இனங்களுக்கிடையில் பதற்ற நிலை போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

இப்பயிற்சியை நெறிப்படுத்திய குழுவினா டிசம்பர் 5-6 ஆம் திகதிகளில் ராயட்பூரில் மற்றொரு பயிற்சியை நடத்தினர்.

டிசம்பர் 10-ம் திகதி மேசிக் கல்லூரியின் வெள்ளி விழாவையொட்டி அங்கு இப்பயிற்சி இடம் பெற்றது. ஆசிரியரும் மாணவருமாக 500 பேர் பங்குபற்றிய இப்பயிற்சியை கருதினால் அந்தோனி படியாரா ஆரம்பித்துவைத்தார்.

# யாழ்ப்பாண/பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் பாடசாலை முதல் பரிசளிப்பு விழா

1989 ம் ஆண்டு மாசி மாதம் 10 ம் திகதி யாழ்ப்பாணம் பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயத்தில் பெற்றோர். ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் பரிசளிப்பு விழா நடத்துவதாக மேற்படி சங்கத்தின் தலைவரும், பாடசாலை அதிபருமாகிய சங். சகோதரி மரியகொறற்றி அவர்களின் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. பரிசளிப்பு விழாவை சிறப்பிக்குமுகமாக பிரதம விருந்தினராக யாழ். ஆயர். வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை, வடமாகாண கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம், பாஷையூர் கட்டளைக் குரவர் வண. பிதா ஜே. ஏ. பிறுன்சிஸ் அடிகளார், யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிறட் அவர்களையும், அழைப்பதெனவும், அண்மையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

போட்டிகளில் தேர்ச்சி பெறும் பாடசாலை மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும் விளையாட்டுப் போட்டிகள் கலை நிகழ்ச்கள், பரிசளிப்பு விழா சம்பந்தமான போட்டிகளும் இடம்பெறும். போட்டிகளை திறம்பட நடத்துவதற்கு உப குழுக்களும் அபிவிருத்திச் சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பாடசாலையில் இதுவே முதல் முறையாக நடத்தப்படும் பரிசளிப்புவிழா என்பதனால், இளைஞர்கள், பொதுமக்கள் பொதுஸ்தாபனங்கள் ஒத்துழைப்புக்கொடுக்க முன் வந்துள்ளார்கள்.

பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக்கழகத்தினரால், பரிசளிப்புவிழாவை சிறப்பிக்கும்முகமாக ஏழுபேர் கொண்ட நொக்கவுட் உதைபந்தாட்டப்போட்டியும், விளையாட்டுக்கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை

# ஒலி, ஒளி சாதன நிலையம் அங்குரார்ப்பணம்

வடகிழக்கு இந்தியாவின் இரண்டாவது ஒலி—ஒளி நிலையம் ஷில்லாங்கிலுள்ள மேய்ப்புப்பணி நிலையத்தில் சலேசிய மாகாண அதிபரான பிதா ஜோண் கலபுராவினால் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

ஒலிப்பதிவு, வீடியோ சாதனங்களுடன் கூடிய இந்நிலயத்தை பிதா கலபுரா திறந்து வைத்து கிறிஸ்மஸ் கீதங்கள் ஒலிப்பதிவு செய்த முதல் ஒலிப்பதிவு நாடாவை வெளியிட்டார். நற்செய்தியை அப்பிராந்தியத்திலுள்ள மக்களுடன் பகிர்ந்து கொள்ள இந்த நிலையம் ஒரு சிறந்த வழியாகும என அவர் அவ்வேளையில் குறிப்பிட்டார்.

நூற்றுக்கு மேற்பட்ட மொழிகளும் ஆதிவாசிகளின் குழுக்களும் காணப்படுகின்ற இபபிரதேசம் இசை, நடனத்தில் வளமான பாரம்பரியத்தை உடையது இவற்றை விருத்தி செய்வதில் இந்நிலையத்திற்கு சிறப்பான பணி உண்டு என நிலயத்தின் இயக்குநரான பிதா ஜோண் ஜெயக்குமார் கூறியுள்ளார்.

போதைப் பொருள்கள், குடிவெறி, இளைஞர் பிரச்சினைகள், குடும்பப் பிரச்சினைகள் முதலியவைபற்றி கட்புலசாதனங்களைத் தயாரிக்க இந்நிலையம் திட்டமிடுகின்றது.

# பெண்ணுரிமை பற்றிய கருத்தரங்கு

விஜயபுர மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் இயக்கத்தின் ஆதரவில் பெண்ணுரிமைபற்றிய கருத்தரங்கொன்று கோட்டயத்தில் நடைபெற்றது. கேரள உயர் நீதிமன்றத்தின் முஸ்லிம் நீதிபதி ஒருவரே பிரதம பேச்சாளராயிருந்தார்.

பெண்ணுரிமைக்காகப் பாடுபட்டு வருபவரான திருமதி அன்னி தையில் குடும்பத்தின் சொத்துக்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமபங்கு அளிக்கப்பட வேண்டுப் என வற்புறுத்தினர். சட்டத்தில் இதற்கு இடமிருப்பினும் நடைமுறையில் இது கையாளப்படுவதில்லை. கிறிஸ்தவ சமூகம் இவ்விடயத்தில் ஏனைய சமூகங்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டுமென கருத்தரங்கில் வற்புறுத்தப் பட்டது.

இந்திய யூனியன் சட்டம் பழைய சட்டங்களை மாற்றியமைத்து விட்டபோதிலும் பழைய நடைமுறையையே மக்கள் பின்பற்றுகின்றனர் மாகவோ பெற்று தம் கணவனின் சொந்த ஊரில் போய் குடியிருப்பதையே பெண்கள் பொதுவாக விரும்புகின்றனர். தமது மனைவியர் கொண்டு வரும் நிலபுலங்களுடன் கணவன்மார் பெரும்பாலும் திருப்தியடைவதில்லை. அதுமட்டுமல்லாது காணியில்லாத குடும்பங்களில் சீதனம் கட்டாயமாகிவிட்டது.

பத்திரிகைகளில் வெளிவந்த ஒரு செய்தி கேரள சமுதாயத்தையே உலுக்கியது. 18 வயதுக்கும் 22 வயதுக்கும் இடைப்பட்ட நான்கு சகோதரிகள் தமது படுக்கையறையின் நான்கு மூலைகளிலும் சுருக்கிட்டுத் தற்கொலைசெய்து கொண்டனர். அவர்கள் எழுதி வைத்த கடிதத்தில் தமது குடும்பம் தமக்குச் சீதனம் தர முடியாத காரணத்தால் தாம் தற்கொலை செய்ததாக கூறப் கூறப்பட்டிருந்தது,

# பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கல்

அண்மையில் நடந்த அசம்பாவிதத்தினால் அடம்பன், உயிலங்குளம் பகுதி மக்கள் தங்கள் இல்லிடங்களை விட்டு அருகில் உள்ள தேவாலயங்களிலும் பள்ளிவாசல்களிலும் தஞ்சமடைந்திருந்தனர் அடம்பனில் தொடர்ச்சியாக நடைபெற்ற ஊரடங்குச் சட்டத்தினால் பல பொதுமக்கள் பாதிக்கப்பட்டு

கூ. சங்கமூலமாக உடனடியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கியது. இது சம்பந்தமாக மன்னார் அரசாங்க சார்பற்ற ஸ்தாபனங்களின் ஒன்றியச் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில் தேடுதல் என்ற போர்வையில் பல பொதுமக்கள் தாக்கப்பட்டு பாதிப்படைந்துள்ளனர். இவர்களுக்கு

# வவுனியாப் பங்கில் மரியாயின் சேனை கியூறியா ஆண்டுவிழா

சென்ற 14-01-89 சனிக்கிழமை காலை 9 மணியளவில் வவுனியா பங்கின் பிரசீடியங்களைச் சேர்ந்த எண்பதுக்கு மேற்பட்ட சேனை அங்கத்தவர்கள் ஒன்றுகூடி தமது கியூறியா மூன்றும் வருட நிறைவிழாவை வெகு விமரிசையாக கொண்டாடினர். விழா திருச்செபமாலை,

உரையாற்றுகையில் எமது பங்கில் மரியாயின் சேனையாளர்கள் புரிந்துவரும் அளப்பரிய சேவைக்கு நன்றி கூறினர். தொடர்ந்து பிரசீடியங்களினால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த நடனங்கள், நாடகம், வில்லுப்பாட்டு முதலாம் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

சமூகம் இவ்விடயத்தில் ஏனைய சமூகங்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டுமென கருத்தரங்கில் வற்புறுத்தப்பட்டது.

இந்திய யூனியன் சட்டம் பழைய சட்டங்களை மாற்றியமைத்து விட்டபோதிலும் பழைய நடைமுறையையே பக்கள் பின்பற்றுகின்றனர். பெண்மக்களின் நலன் கருதி அது தொடர்ந்தும் பின்பற்றப்படும் என சமூகவியலாளர் கருதுகின்றனர். பொருளாதார நயமில்லாவிட்டால் ஆண்கள் விவாகம்செய்ய முன்வருவதில்லை. இதனால் ஏற்படும் துன்பப் பெண்ணிற்கும்அவளது பெற்றோருக்குமே, தமது பங்கை, பொன்னாகவோ பண

அண்மையில் நடந்த அசம்பாவிதத்தினால் அடம்பன், உயிலங்குளம் பகுதி மக்கள் தங்கள் இல்லிடங்களை விட்டு அருகில் உள்ள தேவாலயங்களிலும் பள்ளிவாசல்களிலும் தஞ்சமடைந்திருந்தனர். அடம்பனில் தொடர்ச்சியாக நடைபெற்ற ஊரடங்குச் சட்டத்தினால் பல பொதுமக்கள் பாதிக்கப்பட்டு உணவுக்காக அலைந்து திரிந்தனர். இதனைக் கண்ணுற்ற வாழ்வோதயம், சிறுவர் பராமரிப்பு நிதியம், துயர்துடைப்புச் சங்கம், சர்வோதயம் போன்ற பொதுஸ்தாபனங்கள் அரசாங்க அதிபரின் உதவியுடன் ரூபா 80,000/-ற்கு மேற்பட்ட தொகைக்கு உலர் உணவுப் பொருட்களை ப.நோ. கூ. சங்க மூலமாக உடனடியாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கியது. இது சம்பந்தமாக மன்னார் அரசாங்க சார்பற்ற ஸ்தாபனங்களின் ஒன்றியச் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில் தேடுதல் என்ற போர்வையில் பல பொதுமக்கள் தாக்கப்பட்டு பாதிப்படைந்துள்ளனர். இவர்களுக்கு உடனடி நிவாரணமாக உலர் உணவுப் பொருட்களை வழங்க எமதுசங்க உறுப்பினர்கள் முன்வந்தமைக்ரு நன்றி தெரிவித்தார். குறிப்பாக திரு. டேவிற் லோக்கர் சிறுவர் பராமரிப்பு நிதியம், மன்னார் ஆயர் வாழ்வோதயத் தலைவர், துயர் துடைப்புச் சங்கம், சர்வோதயம் போன்ற ஸ்தாபனங்கள் எமக்கு உடனடியாக வழங்கியது. இதனைக்கொண்டு அடம்பன் பகுதி மக்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்கக்கூடியதாக இருந்தது.

பாதிக்கப்பட்ட மக்களிற் சிலர் துயர்துடைப்புச் சங்கத்தின் உதவியுடனும் அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதுடன் யாழ். வைத்தியசாலைக்கும் எடுத்துச் செல்லப்பட்டனர்.

தகவல்: சின.கிளேயர் பீற்றர்
எம். ஏ. ஆர். ஆர்.

---

## தும்பளை லூர்து அன்னை திருத்தலம்
## திருவிழா நிகழ்ச்சிகள்

2-2-1989 —10-2-1989 மாலை 4-30 மணிக்கு ஆராதனையும் திருப்பலியும்.

11-2-1989—காலை 5-30—முதல் திருப்பலி.
—காலை 7-00—இரண்டாம் திருப்பலி.

A/22 — பங்குத் தந்தை.

---

சென்ற 14-01-89 சனிக்கிழமை காலை 9 மணியளவில் வவுனியா பங்கின் பிரசீடியங்களைச் சேர்ந்த எண்பதுக்கு மேற்பட்ட சேனை அங்கத்தவர்கள் ஒன்றுகூடி தமது கியூறியா மூன்றாம் வருட நிறைவிழாவை வெகு விமரிசையாக கொண்டாடினர். விழா திருச்செபமாலை, நற்கருணை ஆசீர்வாதத்துடன் ஆரம்பித்தது. அருள்திரு A. பிலிப் அடிகளார் சிறப்புரையில் சேனை அங்கத்தவர்கள் கொண்டிருக்கவேண்டிய தியாகம் நிறைந்த சேவை மனப்பக்குவம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

பங்குத்தந்தை அருன்திரு. பி. யேசுராஜா அடிகளார் உரையாற்றுகையில் எமது பங்கில் மரியாயின் சேனையாளர்கள் புரிந்துவரும் அளப்பரிய சேவைக்கு நன்றி கூறினர். தொடர்ந்து பிரசீடியங்களினால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த நடனங்கள், நாடகம், வில்லுப்பாட்டு முதலாம் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. வவுனியா முதியோர் பிரசீடிய, ஐம்பது வயதுக்கு மேற்பட்ட பெண்கள் நடாத்திய வில்லுப்பாட்டு யாவரையும் கவர்ந்தது குறிப்பிடத்தக்கது. ஈற்றில் நன்றியுரையுடனும், தேனீர் விருந்துடனும் விழா இனிதே முடிவுற்றது.

தகவல்:- ஜே சைமன்

---

## எழுத்தாளர்களுக்கு

திருமறைக் கலாமன்றம் வருகிற பாஸ்கு திருவிழாவை முன்னிட்டு ''பாஸ்காமலர்'' ஒன்றினை வெளியிட ஆயத்தம் செய்து வருகின்றது. மலரில் பிரசுரிப்பதற்கு ஆக்கம் தர விரும்புவோர் பாடுகள்- இறப்பு உயிர்ப்பு ஆகிய கருத்துக்களை உள்ளடக்கிய கதை, கட்டுரை, நாடகம் ஆகியவற்றை எமக்கு அனுப்பிவைக்கும் வண்ணம் அன்பாய் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். தரமானவை மலரில் பிரசுரிக்கப்படும்.

– நன்றி –

''வெளியீட்டுப்பகுதி''
திருமறைக் கலாமன்றம்
223, பிரதான வீதி
யாழ்ப்பாணம்

---

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 3ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

பதிவு இல: QB / 100158 / 81

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**